Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY தேசிய தினசரி

போன்: 389 — தபால் பெட்டி எண் 49

மலர் 3 — யாழ்ப்பாணம், பிலவ கார்த்திகை 29 ஆம் நாள் — றஜபு 5 — (14-12-61) — வியாழக்கிழமை — இதழ் 260

வாசனை உலகில் ஓர் பரப்புபர!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்-2 மதுரை

பார்லிமெண்டில்

# எதிர்க்கட்சி எச்சரிக்கை

## வேலைக்கு திரும்புவோருக்கு பொலிஸ் பாதுகாப்பு

கொழும்பு, புதன்

"வேலை நிறுத்தம் செய்து வரும் இ. போ. ச. பஸ் ஊழியர்களில் வேலைக்குத் திரும்ப விரும்புபவர்களுக்கு பாதுகாப்பளிக்கப்படும்" என்று இ. போ. சபை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

வேலைக்குத் திரும்ப விரும்பும் ஊழியர்கள் சேவை செயவதற்கு பஸ் கராஜைக்கு எடுத்ததும் ஒவ்வொரு பஸ்ஸிலும் பொலிசார் பிரயாணம் செய்ய ஒழுங்கு செய்யப்படுமென்றும் பஸ் டிப்போக்களிலும் ஆயுதந்தாங்கிய வீரர்கள் காவல் புரிய ஒழுங்கு செய்யப்படுமென்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஸ்ரீலங்கா ஜாதிக பரவஹன சேவக சமித்தி வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு வேலைக்குத் திரும்புவதென்று முடிவு செய்ததைத் தொடர்ந்தே வேலைக்குத் திரும்ப விரும்பும் தொழிலாளர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பளிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா பஸ் ஊழியர் யூனியன் அங்கத்தவர்கள் வேலைக்குத் திரும்புவதென்று செய்த முடிவினால் எவ்வளவு தூரம் பயன் கிடைக்குமென்று இப்பொழுது கூறுவது சாத்தியமில்லை என்று இ. போ. சபைத் தலைவர் திரு. ஆர். டி. டி' சில்வா இன்று காலை தெரிவித்தார். சில டிப்போக்களில் இந்த யூனியன் அங்கத்தவர்கள் பெரும்பான்மையாக உள்ளனரென்றும் அவர் கூறினர்.

டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா அபிப்பிராயம் தெரிவிக்கையில் ஸ்ரீலங்கா யூனியன் செய்த முடிவினால் இப்பொழுதே பலாபலன் எதையும் சொல்வது சாத்தியமில்லையென்றும் தொழிலாளர்கள் இன்னும் வெளியே தானுள்ளார்களென்றும் தெரிவித்தார். "பொறுத்திருந்து பார்ப்போம்" என்று டாக்டர் கொல்வின் கூறினர்.

## ரஷ்யாவுக்கு தே. எண்ணை

கொழும்பு, புதன்

சோவியத் யூனியன் - இலங்கை வர்த்தக உடன்படிக்கையின் கீழ் சோவியத் யூனியனுக்கு முதல் தடவையாக நாளை 1,500 தொன் தேங்காய் எண்ணெய் இலங்கையிலிருந்து சோவியத் யூனியனுக்கு ஏற்றுமதியாகிறது.

## நோயாளர் கஷ்டம்

கொழும்பு, புதன்

கொழும்பு தெற்கு ஆஸ்பத்திரிக்கு சென்ற நோயாளர் மருந்தெடுத்துக்கொண்டு வீட்டுக்குச் செல்ல முடியாமல் திண்டாடினர். இ போ. ச. வேலை நிறுத்தத்தால் ஏற்பட்ட சிக்கலினல், சிலநோயாளர் பல மைல் தூரத்திலுள்ள தங்கள் வீடுகளுக்கு கால்நடையாகவே சென்றனர்.

ஆஸ்பத்திரிக்கு அருகில் பல கார்களும், மோட்டார் வான்களும் இருந்தபோதிலும் நோயாளர் அவ்வாகனங்களில் ஏறிச் செல்லவில்லை. அதிக கட்டணமே இதற்குக் காரணம். சைக்கிளில் செல்பவர்கள் தங்களது சைக்கிளில் இரண்டு பேரை ஏற்றிச்செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

## "41-வது உத்தரவை வாபஸ்பெற்றல் வேலைநிறுத்தம் முடியும்"

### அவசரகாலத்தை நீக்கவேண்டும் இன்றேல் போராட்டம்

— பிலிப்

கொழும்பு, புதன்

இலங்கை பஸ் வேலைநிறுத்தம்பற்றி பார்லிமெண்ட் சபையில், டாக்டர் என். எம். பெரேரா கொண்டுவந்த அவசரப் பிரேரணை பற்றி இன்று மாலை 4 மணிக்கு விவாதம் ஆரம்பமாகி இரவு 8-30 மணிக்கு முடிந்தது.

இவ்விஷயத்தில் டாக்டர் என். எம்., தொழில்மந்திரி சிறிவர்த்தன, நிதிமந்திரி பீலிக்ஸ், டாக்டர் கொல்வின், திரு. பிலிப் குணவர்த்தன, டாக்டர் நாகநாதன், திரு ராபர்ட் குணவர்த்தன இவர்கள் கலந்து கொண்டனர்.

டாக்டர் என். எம். பெரேரா கூறியதாவது:

இ. போ. ச. பிறப்பித்த 41-வது சுற்றறிக்கையை உடனடியாக வாபஸ் பெற வேண்டும். அப்படிச் செய்தால் இந்த வேலைநிறுத்தம் சுமுகமாகத்

(8-ம் பக்கம் பார்க்க)

## பரீட்சை எடுக்கத் தவறிய மாணவருக்கு புதிய பரீட்சை

கொழும்பு, புதன்

பஸ் ஊழியர் வேலைநிறுத்தம் காரணமாக ஜி. ஸி. ஈ. பரீட்சை எழுத முடியாமல் போன மாணவர்களுக்கு புதிதாக பரீட்சை எழுத வசதிகள் செய்யப்படும் என்று பரீட்சைக் கமிஷனர் திரு. எஸ். ஈ. ஆர். பேரின்பநாயகம் இன்று தெரிவித்தார்.

எத்தனை மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்ற முடியாது போயினர் என்பதுபற்றிய விபரங்கள் கிடைக்க வேண்டுமென்றும் இப்பொழுது நடைபெறும் பரீட்சை 19-ந் திகதியுடன் முடிவடைந்ததும் பரீட்சை எடுக்க முடியாது போன மாணவர்களுக்கென புதிதாக பரீட்சை வைப்பதற்கு ஒழுங்கு செய்யப்படும் என்றும் திரு. பேரின்பநாயகம் கூறினர.

## தபால்சேவை ஸ்தம்பிதம்

கொழும்பு, புதன்

பஸ் ஊழியர் வேலை நிறுத்தம் காரணமாக பல வெளியூர்களில் தபால் சேவை ஸ்தம்பித்துள்ளது.

## சோவியத் வைத்திய நிபுணர் கோஷ்டி

கொழும்பு, புதன்

சுகாதார மந்திரியின் தலைமையில் சோவியத் வைத்திய நிபுணர் கோஷ்டியொன்று நேற்று இலங்கை வந்து சேர்ந்தது. இக்கோஷ்டி 12 தினங்கள் இலங்கையில் தங்கியிருக்கும்.

## அகாலி டால் தீர்மானம்

புதுடில்லி, டிச. 13

பஞ்சாபிசுபா கோரிக்கையை வற்புறுத்தியும் சீக்கியருக்கு எதிராகப் பாரபட்சம் காட்டப்படுவதாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பற்றி விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷனைப் பகிஷ்கரிப்பதென்று செய்த தீர்மானத்தை ஆதரித்தும் அகாலி டால் மகாநாடு இன்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

பொதுத் தேர்தல் நேர்மையாகவும் நீதியாகவும் நடைபெறுவதற்கு வசதியாக முதலில் ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளும் தீர்மானமும் நிறைவேறியது. இந்த மகாநாடு அகாலி டால் தலைவர் மாஸ்டர் தாராசிங் தலைமையில் நடைபெற்றது.

## சில பகுதிகளில் பஸ் சேவை ஆரம்பம்

### யாழ்ப்பாணத்தில் சேவை ஸ்தம்பிதம்

கொழும்பு, புதன்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஸ்ரீ லங்கா பஸ் தொழிலாளர் சங்கத்தினர் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டதைத் தொடர்ந்து குருநாகல், இரத்தினபுரி, கேகாலை ஆகிய இடங்களில் பஸ் போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

குருநாகலையில் இன்று காலை 25 பஸ்கள் சேவை செய்ய ஆரம்பித்ததாகவும் பிற்பகலில் 50 பஸ்கள் சேவைசெய்ததாகவும் அறிவிக்கப்படுகிறது. இரத்தினபுரியிலும், கேகாலையிலும் அதிக பஸ்கள் சேவைசெய்ய ஆரம்பித்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலும் பல பஸ் சாரதிகளும் கண்டக்டர்களும் வேலைக்குத் திரும்பியதாக அறிவிக்கப்பட்டது. ஆனல், எவருமே வேலைக்குத் திரும்பவில்லையென்று பஸ் ஊழியர் சங்கத்தலைவர் அறிக்கை விடுத்துள்ளார்.

"யாழ்ப்பாணப் பகுதியில் பஸ் ஊழியர்கள் வேலைக்குத் திரும்பிவிட்டனர்" என இலங்கை வானொலியில் ஒலிபரப்பான ஒரு செய்தியை அகில இலங்கை ஐக்கிய மோட்டார் தொழிலாளர் யூனியன் யாழ்ப்பாண மாவட்டப்பிரதிநிதி திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் மறுத்துள்ளார். திரு. தர்மரத்தினம் இதுசம்பந்தமாகத் தெரிவித்துள்ளதாவது:—

"சோஷலிஸ அரசாங்கம் எனக் கூறிக்கொள்ளும் இந்த அரசாங்கம், 1947ம் வருடம் அரசாங்க சேவை ஊழியர் நடத்திய வேலை நிறுத்தத்தை முறியடிக்க யு. என். பி அரசாங்கம் கைக்கொண்ட முறையையே கையாள்கிறது.

தொழிலாளர்கள் இவ்வித பிரசாரத்தால் ஏமாந்துபோய் விடமாட்டார்கள் என நான் நம்புகிறேன். யாழ்ப்பாணத்திலுள்ள பஸ் தொழிலாளர்கள் உண்மையில் வேலைக்குத் திரும்பவில்லை."

## 1300 தோட்டத் தொழிலாளர்வேலைநிறுத்தம்

நுவரெலியா, புதன்

ஹபொடை மகா ஊவாத் தோட்டத்தில் 1300 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளார்கள் எனத் தெரிகிறது. தோட்டத் தொழிலாளியான கோவிந்தன் என்பவரை வேலையிலிருந்து நீக்கியதன் காரணமாகவே 1300 தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்து வருவதாகத் தெரிகிறது. தம்மில் சிலர் வேலை செய்யும்போது குளவிகளினல் குத்தப்பட்டதற்குத் தமக்கு நஷ்டஈடு எதுவும் வழங்கப்படவில்லையெனவும் இத்தோட்டத் தொழிலாளிகள் குறை கூறுவதாகத் தெரியவந்துள்ளது.

கிரிக்கட்

## இந்தியாவுக்கு 253 ரன்கள்

புதுடில்லி, டிச. 13

இந்தியக் கோஷ்டிக்கும் இங்கிலாந்து கோஷ்டிக்குமிடையில் இன்று டில்லியில் ஆரம்பமான மூன்ருவது கிரிக்கட் டெஸ்ட் போட்டியில் இந்திய கோஷ்டி துருப்பெடுத்தாடியது இன்றைய ஆட்ட முடிவு வரையில் இந்திய கோஷ்டி மூன்று விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 253 ரன்கள எடுத்தது.

## உங்கள் இராசிப் பலன்

ஈழநாடு 15-12-61 இதழில் "உங்கள் இராசிப் பலன்" வெளியாகின்றது. பிரதிவாரமும் வெள்ளிக்கிழமை இராசிப்பலன் வெளிவரும்.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

---

## விற்பனைக்கு

பாவனையிலிருக்கும்"பர்குசன்" லாம்பெண்ணை டிருக்ரர் டில்லர், மோல்போட் பிளௌவை, கலே இவைகளுடன் Arnco Agricultural Industries வவுனியாவில் பார்வையிடலாம் வாங்க விரும்பும் விலை குறித்து 32, கல்யாணி ரோட், கொழும்பு 6க்கு எழுதவும்.

---

## அறிவித்தல்

பம்பாய் பாரதீய வித்யா பவனம், சென்னை அமரபாரதீ பரீட்சா சமிதி என்பவற்றின் சமஸ்கிருதப் பரீட்சைகள் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் மாசி மாதத்தில் நடக்கும். விண்ணப்பமனுப்பிப் பாடப்புத்தகங்களை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.—பண்டிதர் ச.ப. சர்மா, கோப்பாய்.

---

## தேவை

நவற்கிரி பல நோக்கக் கூட்டுறவு பண்டகசாலைக்கு ஒரு மனேச்சர் தேவை. 20-12-61 வரையும் விண்ணப்பங்கள் காரியதரிசி அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படும். உள்ளூர் (நவற்கிரி)விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது

தராதரம்: S. S. C. சித்தியடைந்தவராய் இருத்தல் வேண்டும். குறைந்தது இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பித்தல் வேண்டும்.

பிணை: ரொக்கம் 500 (ஐந்நூறு) ரூபாவும், உறுதிப்பிணை இரண்டாயிரம் ரூபாவும். சம்பளம்: விற்பனையாளன் உட்பட ரூ. 145. பா. பொன்னம்பலம், காரியதரிசி, க. சுந்தரமூர்த்தி, தலைவர்.

---

## அமைதிக்கு பங்கம் விளைவித்ததாக வழக்கு

### 12 எதிரிகளும் எச்சரித்து விடுதலை

மாவிட்டபுரம், புதன்

"உங்கள் கிராமத்தில் தற்பொழுது ஒரு கலவரமும் இல்லாததால் பொலிசார் வழக்கை வாபஸ் பெறுகின்றனர். பொலிசார் இவ்வழக்கை வாபஸ பெறுவதை நீங்கள் உங்களுக்கு நன்மையாகக் கருதிக் கொண்டு உங்கள் கிராமத்திற்குச்சென்று கலவரத்தை ஆரம்பிக்கக் கூடாது. உங்களை நான் விடுதலை செய்கிறேன்."

சங்கானைப் பொலிசாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட ஒரு வழக்கில் நீதிபதி திரு. டபிள்யூ. டி. தாமோதரம் பன்னிரண்டு எதிரிகளை எச்சரித்து விடுதலை செய்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில் சங்கானையைச் சேர்ந்த ஆறுமுகம் பொன்னுத்துரை, கணபதிப்பிள்ளை தம்பிஐயா, முருகேசு ஆறுமுகம், கணபதிப்பிள்ளை தர்மலிங்கம், சண்முகம் சபாரத்தினம், முத்து திருமூர்த்தி, கணபதிப்பிள்ளை செல்வராசா, கணபதிப்பிள்ளை சுப்பையா, நல்லையா சண்முகலிங்கம், செல்லப்பா குணரத்தினம், கணபதிப்பிள்ளை முத்தையா. நல்லதம்பி துரைசிங்கம் ஆகிய பன்னிரண்டு நபர்களும் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய முறையில் நடந்ததாக சங்கானைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர்.

## விபத்துக்களை தவிர்க்க விசேஷ உடையும் தொப்பியும்

மேற்கு பெர்லின், டிச 13

தொழில் துறையில் தொழிலாளர்களுக்கு விபத்துகள் ஏற்படாமல் தடுப்பதுபற்றியும், ஏற்படும் விபத்துகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவது குறித்தும் 6 ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 1000 நிபுணர்கள் மேற்கு பெர்லினில் நடைபெற்ற மகாநாடு ஒன்றில் கலந்துகொண்டனர். இந்த விபத்துகள் எப்படி ஏற்படுகின்றன அவைகளை எப்படி தவிர்க்கலாம் என்பதை விளக்கும் கண்காட்சி ஒன்றும் இத்துடன் நடைபெற்றது. பாதுகாப்பு உடைகள், சாதனங்கள் தயாரிப்பாளர்கள் சுமார் 60 பேர்கள் இதில் கலந்துகொண்டனர். தீ விபத்து வெடி விபத்து போன்றவைகளிலிருந்து இந்த உடைகளை அணிவதன் மூலம் விபத்திற்குள்ளாகாமல் இருக்கலாம் என்பது நிதர்சனமாகக் காட்டப்பட்டது.

இவ்வளவு பயனளிக்கக் கூடிய சாதனங்களை உபயோகிப்பதிலும் ஒரு இடைஞ்சல். அதுதான் மனிதனின் மனப்போக்கு, அறியாமை, அஜாக்கிரதை, அலட்சியத் தன்மை இவைகளே விபத்திற்குள்ளாக்குகின்றன என்று நிபுணர்கள் கூறுகின்றனர். சில அழகிய பெண்கள் தங்கள் கூந்தலை முடிந்து அதன் மீது கைக்குட்டைகளைச் சுற்றிக்கொள்ள மறுக்கின்றனர். இப்படிச் செய்யாமல் இருந்தால் தலைமயிர் இயந்திரங்களில் சிக்கிவிபத்து ஏற்படக்கூடும். வயது வந்த தொழிலாளர்கள் பாதுகாப்பு உடையை அணியச்சொன்னல் இது ஒரு யூனிபோம் மாதிரி இருக்கிறது என்று முணுமுணுக்கிருர்கள். ஆகவே இந்த பாதுகாப்பு உடைகள், சாதனங்கள் இவைகளை உபயோகிப்பதிலுள்ள நன்மைகள் மக்களுக்கு விளக்கப்படவேண்டும். பள்ளிகளில் இந்த ஆபத்துக்களைப் பற்றியும் அவைகளைத் தவிர்க்கும் முறைபற்றியும் போதிக்கப்படவேண்டும்.

எல்லா ஜெர்மன் பல்கலைக் கழகங்களிலும் தொழில் துறையில் கையாளவேண்டிய சிகிச்சை முறைகளைப் போதிக்க வேண்டும் என்று யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்சூரன்ஸ் ஸ்தாபனங்கள் இந்த பாதுகாப்பு உடைகளையும் சாதனங்களையும் வழங்குவதில் உதவ முன்வந்திருப்பதாக அறிவித்துள்ளன. இம்முறைகளைப்பற்றியும் பாதுகாப்பு அவசியம் பற்றியும் விளக்க பிரசாரத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. விபத்துக்களிலிருந்து தப்பவும், கேடு எதுவும் ஏற்படாமல் தடுக்கவும் மேற்கு ஜெர்மனியில் பாதுகாப்புஉடைகளும் விசேஷத் தொப்பியும் தயாரிக்கப்பட்டு உபயோகிக்கப்பட்டு வருகின்றன. இந்த உடையும் தொப்பியும் நல்ல அழுத்தமான வர்ணங்கள் கொண்டதாக இருப்பதால் இதை அணிந்துள்ளவர்கள் எங்கிருக்கிருர்கள் என்பதைக் கண்டுபிடித்துவிடலாம். கட்டிட வேலை நடைபெறும் இடத்தில் மிக உயரத்திலிருந்து ஒரு செங்கல் கீழே விழுவதாக வைத்துக்கொள்வோம், இந்த தொப்பி அணிந்துள்ளவர் மீது அக்கல் விழுந்தால் டென்னிஸ பந்து மாதிரி துள்ளிப் போய் விழும்.

ஜெர்மன் கட்டிடத் தொழிலில் இந்த உடை தொப்பி உபயோகிப்பது காரணமாக விபத்திற்குள்ளாகுபவர் தொகை 50 சத விகிதம் குறைந்துவிட்டது. விபத்துக்கள் ஏற்படுவதை குறைப்பதற்கான முயற்சிகள் மேற்கொண்டு எடுக்கப்பட்டு வருகின்றன.

-----

கொழும்பு, புதன்

உள்நாட்டு, வெளிநாட்டு படத்தொழில் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்கான தகவல் நிலையமொன்றை, இலங்கை கலைக் கழகம் விரைவில் நிறுவவிருக்கிறது.

# ஜனவரி 13ம்தேதி எஸ். ஜே. வி. திருமலை விஜயம்

## திரு. ஏகாம்பரத்தின் உருவப் படத்தை திரைநீக்கம்செய்வார்

திருக்கோணமலை, புதன்

திருக்கோணமலை நகராண்மைக் கழகத்தின் அழைப்பிற்கிணங்க, காலஞ்சென்ற மூதூர் முதலாவது பாராளுமன்றப் பிரதிநிதியும் திருமலை நகராண்மைக் கழகத் தலைவருமான திரு. த. ஏகாம்பரத்தின் உருவப் படத்தை திரைநீக்கம் செய்வதற்காக திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஜனவரி 13-ம் திகதி திருக்கோணமலை வருகின்ருர்.

தடுப்புக்காவலிலிருந்து விடுதலை பெற்று வைத்திய சிகிச்சைக்காக இங்கிலாந்து சென்று திரும்பிய திரு. செல்வநாயகம் நீண்டகால இடைவெளிக்குப்பின் திருமலை வருகைபுரிவது இதுவே முதல் தட்வையாகும். திரு. எஸ். ஜே. வி க்கு. மாபெரும் வரவேற்பு அளிக்கவும் திருமலை நகராண்மைக் கழகம் அண்மையில் முடிவு செய்ததற்கிணங்க, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை திருமலை நகரசபை துரிதமாக எடுத்துவருகின்றது.

திருமலை வரும் திரு. செல்வநாயகத்திற்கு வரவேற்பளிக்க, சாம்பல்தீவு, குச்சவெளி, திரியாய், புல்மோட்டை, மூதூர், கிண்ணியா ஆகிய இடங்களில் வாழும் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் தீர்மானித்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

——

## நிதிமந்திரிக்கு அருந்ததியர் மகஜர்

கொழும்பு, புதன்

அகில இலங்கை அருந்ததியர் சங்கம் நிதிமந்திரிக்கும், பிரதமரின் நிரந்தரக் காரியதரிசிக்கும் அனுப்பியுள்ள மகஜர் பின்வருமாறு:—

"இலங்கையின் சரித்திரத்திலேயே சொர்க்க பூமியாக திகழப் பாடுபட்ட நகரசுத்தி தொழிலாளர்களுக்கு விசாவரி விலக்கப்பட்டமைக்கு கனம் நிதி அமைச்சரை அவர்களை இச் சங்கம் பாராட்டுகிறது. அதே சமயம் தனிப்பட்ட கம்பெனிகள், பங்களாக்கள், பாங்குகள், ஒட்டல்கள் சிறு குடியிருப்பு வீடுகள்வரை நகரசுத்தித் தொழிலாளர்களாக ஈடுபட்டிருக்கும் இச் சங்கத்தின் அங்கத்தவர்கள் சிறு ஊதியம் பெற்று தம் பெண்டு பிள்ளைகள் சகிதம் குடும்பம் நடாத்தி வயிறு வளர்த்தவர்கட்கும் இவ்விதச் சலுகை அளிக்கமாறு கனம் நிதியமைச்சர் உட்பட கனம் பிரதம மந்திரி, குடியேற்ற வெளியேற்ற கட்டுப்பாட்டு அதிகாரி, பிரதமரின் நிரந்தரக் காரியதரிசி ஆகியோகட்கும் நமது சங்கம் கடந்த பல மாதங்களாக முறையிட்டது. அதன் பலன் நமது சங்கத்துக்கு சாதகமானதாக இருக்குமென்றும் எதிர்பார்த்தோம். ஆனல் விபரீதமாகவே இருக்கிறது. கனம் நிதி அமைச்சரால் கூறிய முடிவு குடியேற்ற வெளியேற்றக் கட்டுப்பாட்டு அதிகாரியால் எழுதப்பட்ட கடிதத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது அறிந்து திடுக்கிட்டுவிட்டோம். தாங்கள் மீண்டும் இவ் விஷயத்தை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதுடன் நியாயம் வழங்கி நாட்டிற்கு பணி செய்தவர்கள் துன்புறுத்தாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

——

டிரான், டிச. 13

அல்பேனியாவிலுள்ள தனது தூதரை செக்கோஸலோவேக்கியா நிரந்தரமாகத் திருப்பியழைத்துக் கொண்டதாக அறிவிக்கப்படுகிறது.

## மாலை 4 மணிக்கு வீடு திரும்பலாம்

கொழும்பு, புதன்

மாலை 4 மணியுடனேயே காரியாலய வேலையை முடித்துக் கொண்டு வீடு திரும்புவதற்கு அரசாங்க சேவையாளர்கள் அனைவருக்கும் அனுமதி வழங்கும்படி இலாகாத் தலைவர்கள் அனைவரும் அறிவிக்கப்பட்டுள்ளார்கள். வழக்கமாக அரசாங் காரியாலயங்கள் அனைத்தும் 4-30க்கே மூடப்பட்டுவந்தன. இப்போது ஏற்பட்டுள்ள போக்கு வரத்து வசதிக்குறைவுகள்காரணமாகவே அரசாங்க காரியாலயங்கள் அரை மணி நேரம் முன்னதாக மூட ஏற்பாடாகியுள்ளது.

## ஆஸ்பத்திரிகளுக்கு அதிக வசதிகள் அளிப்பதென அமைச்சுமுடிவு

கொழும்பு, புதன்

நாட்டிலுள்ள சகல ஆஸ்பத்திரிகளுக்கும் போதிய வசதியளிப்பதற்காக, ஆஸபத்திரி லோட்டரி சபை நிதியிலிருந்து ரூ. 8,500,000 பெறுவதென சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது.

'எக்ஸ-ரே' யந்திரங்களை வாங்குவதற்காகவும் ஆஸபத்திரிகளில் இப்போது கைவசமில்லாத சத்திரசிகிச்சை உபகரணங்களை வாங்கவும் இந்தத் தொகையில் 3,000,000 ரூபாயை செலவழிக்க அமைச்சு முடிவுசெய்துள்ளது.

ஆஸபத்திரிகளில் ஏற்பட்டிருக்கும் தண்ணீர்ப் பிரச்சினையை தீர்ப்பதற்காக ரூ. 3,000,000 செலவிடப்பெறும். மிகுதியான 2,500,000 ரூபா புதிய ஆஸபத்திரிகளை நிறுவவும், இப்போதுள்ள ஆஸபத்திரிகளின் கட்டடங்களைத் திருத்தவும் பயன்படுத்தப்படும்.

## தொழிலாளருக்கு எதிராக வானொலிப் பிரயோகம்

கொழும்பு, புதன்

"இ. போ. ச. சச்சரவு குறித்து பிரதம மந்திரி, வானொலியில் உண்மைக்கு மாருன கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்." இவ்வாறு இ. போ. ச. ஊழியர்கள்பற்றி அரசாங்க தொழிலாளர் வர்த்தக சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுபற்றி அரசாங்கத் தொழிலாளர் வர்த்தக சம்மேளனத்தின் பொதுக் காரியதரிசி திரு. நெல்சன் குணரத்தின குறிப்பிடுகையில், தொழிலாளர்களுக்கு எதிராக, அரசாங்கம் வானொலியை உபயோகிப்பது இப்போது வழக்கமாகிவிட்டது என்றும் வங்கி ஊழியர் வேலை நிறுத்தத்தின் போதும் இதே நடவடிக்கை கையாளப்பட்டது என்றும் கூறினர்.

சம்மேளனத்தின் நிர்வாகக் கமிட்டியின் அவசரக் கூட்டமொன்றும் நேற்று மாலை நடைபெற்றது.

## இரு பெண்களைக் கத்தியால் வெட்டியதாக வழக்கு

### எதிரி விடுதலை

மாவிட்டபுரம், புதன்

சங்கானை கிழக்கைச் சேர்ந்த மார்க்கண்டு கண்மணி, அருச்சுணன் இலச்சுமி ஆகிய இரு பெண்களையும் கத்தியால் வெட்டிக் காயம் விளைவித்ததாக பண்டத்தரிப்பைச் சேர்ந்த ந. செல்லத்துரை என்பவர்மேல் குற்றஞ் சாட்டி சங்கானைப் பொலிசாரால் மல்லாகம் நீதிபதி திரு. டபிள்யூ. டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இலட்சுமியின் சாட்சியத்தைப் பதிவு செய்தபின் நீதிபதி எதிரியை விடுதலை செய்தார்.

இலட்சுமி சாட்சியமளிக்கையில் கூறியதாவது: "இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் பன்னிரண்டாந் திகதி மாலை 2-30 மணியளவில் நான் எனது தாயுடனும் தகப்பனுடம் வீட்டிலிருந்தேன். அவ்வேளையில் இவ்வெதிரி ஒரு கத்தியுடன் அங்கு வந்து எனது தகப்பனரைக் கலைத்தார். எனது தகப்பனர் பயத்தால் ஓடவே எதிரியும் தொடர்ந்து அவரைக் கலைத்தார். நான் சத்தமிட்டேன். அப்பொழுது எதிரி வந்து என்னை கத்தியால் வெட்டினர். என்னை அவர் வெட்டியதும் நான் கதறினேன். எனது தாயார் பயந்து பக்கத்து வீட்டுக்கு ஓடினர். எதிரி எனது தாயாரையும் கத்தியால் வெட்டினர்."

இச்சம்பவம் நடைபெற்ற தினத்தன்று காலை 9 மணியளவில் எதிரி தங்கள் வீட்டுக்கு வந்து கடனக ரூபா ஐம்பது கேட்டதாயும் தனது தகப்பனர் கொடுக்க மறுக்கவே எதிரி திரும்பிச்சென்றுவிட்டார் என்றும் பின்னர் நண்பகல் 12மணியளவில் அவர் கத்தியுடன் திரும்பி அங்கு வந்து தங்களை வெட்டினர் எனவும் கூறினர்.

சாட்சி இரு முரண்பாடான சாட்சியங்களைக் கூறவே, நீதிபதி வழக்கை நிறுத்தி சாட்சியம் திருப்தியளிக்காததால் எதிரியை விடுதலை செய்தார்.

——

## "எம். பி. க்களுக்கு ஏன் அபிவிருத்திவரி அறவிடவில்லை"

—காலி எம். பி.

கொழும்பு, புதன்

"பார்லிமெண்ட் அங்கத்தவர்களிடம் தேசிய அபிவிருத்தி வரி அறவிடவேண்டும் என்ற சட்டத்தை அமுல் நடத்துவதில் நிதி மந்திரி ஏன் தாமதமெடுக்கிருர்." இதைத்தான் தற்பொழுது காலி எம். பி. திரு. டபிள்யு. தஹநாயக்கா அறிய விரும்புகிருர்.

இதுபற்றி திரு. தஹநாயக்கா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:—

"இரண்டு மாதங்கள் கழிந்துவிட்டன. ஆனல் எம். பி. க்களிடமிருந்து இதுவரை தேசிய அபிவிருத்திவரி அறவிடப்படவில்லை. எம். பி. க்கள் ஏன் தேசிய அபிவிருத்திவரி செலுத்துவதில்லை என்பது தனிப்பட்ட ஒவ்வொரு வரிசெலுத்துபவர்களும் பார்லிமெண்ட் அங்கத்தவர்களை புகார் செய்கிருர்கள். இது விஷயத்தில் நிதிமந்திரி கூடிய கவனமெடுக்காவிடில் பொறுப்பற்ற மந்திரியாகிவிடுவார்".

# சில இடங்களில் பஸ்கள் மீண்டும் ஓடின

## சமிதி வேண்டுகோளைத் தொடர்ந்து சிலர் வேலைக்குத் திரும்பினர்

கொழும்பு, புதன்

**ஸ்ரீலங்கா ஜாதிக பிரவாகன சேவக சமிதி தன் அங்கத்தினர்களை வேலைக்குத் திரும்புமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க நாட்டின் சில பகுதியில் மீண்டும் பஸ்கள் ஓட ஆரம்பித்தன. குருநாக்கலில் 25 பஸ்கள் மீண்டும் சேவையில் ஈடுபட்டன. சீக்கிரம் வழமையான சேவை இங்கு ஆரம்பமாகிவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.**

*கேகாலையில் 3 பாதைகளில் பஸ்கள் ஓடுகின்றன. இரத்தினபுரியிலும், மற்றும் சில இடங்களிலும் வேலைக்குத் திரும்புவதாக ஊழியர்கள் அறிவித்துள்ளார்களாம்.*

**பஸ் ஊழியர் வேலை நிறுத்தத்தை நடத்தி வரும் நான்கு தொழிற் சங்கங்களில் ஒன்றுன ஸ்ரீ லங்கா ஜாதிக பிரவாகன சேவக சமிதி, வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு, உடனடியாக வேலைக்குத் திரும்புமாறு அதன் அங்கத்தினர்களைக் கேட்டிருக்கிறது. இதர 3 தொழிற் சங்கங்களும் தொடர்ந்து வேலை நிறுத்தத்தை நடத்தும் என அறிவிக்கப்பட்டது.**

வேலை நிறுத்தத்கை முடிவுக்குக் கொண்டு வருவதெனத் தீர்மானித்ததற்கான காரணங்கள் சமிதியின் தலைவரும், இணைக்காரியதரிசியும் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளன.

தகராறுக்கான சற்று நிருபம் பற்றிப் பிரதமர் பரிசீலிக்கத் தயாராய் இருப்பதாக விருப்பம் தெரிவித்திருப்பதும் இவ்விதச் சுற்று நிருபம் அனுப்புவதற்குக் காரணமாயிருந்த சந்தர்ப்ப சூழ்நிலை பற்றி விசாரணை நடத்த அவர் இணங்கியிருப்பதுமே, சமிதியின் முடிவுக்குக் காரணம் என அறிவிக்கப்பட்டது.

தங்கள் சங்கத்தின் போஷகரான, பிரதமர் இவ்விதம் உறுதி மொழி அளித்திருப்பதால், வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு வேலைக்குத் திரும்புவதெனத் தீர்மானித்திருப்பதாய் சமிதியின் அறிக்கை கூறியது.

அரசாங்கத்துக்கோ அல்லது இ. போ. ச. வுக்கோ முன்னறிவித்தலின்றி வேலைநிறுத்தம் செய்திருப்பதாயும், உடனடியாக வேலைக்குத் திரும்பினுல் சுற்றுநிருபம் பற்றி ஆராயத் தயாராய் இருப்பதாயும் பிரதமர் அரசாங்கப் பாராளுமன்றக் கட்சிக் கூட்டத்தில் அறிவித்தார். பார்லிமெண்ட் கட்சி அரசாங்கத்தின் தீர்மானத்தை ஏகமனதாக அங்கீகரித்து.

வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது. மக்கள் வழக்கம்போல் கஷ்டத்துக்குள்ளாகினர். தபால் விநியோகத்திலும் தாமதம் ஏற்பட்டது.

பஸ் சேவையிலடங்கியுள்ள 1000 தபாற்கந்தோர்களும் உபதபாற்கந்தோர்களும் வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்டன. இதைச் சமாளிக்க மாற்று நடவடிக்கைகளை எடுக்கப்பட்டுள்ளன.

நாவலப்பிட்டியிலும், அங்குரஸ்ஸவிலும் கிறிய அசம்பாவிதங்கள் ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

48 டிப்போக்களில் 2800 பஸ்கள் வெளியே எடுக்கப்படாமல் கிடப்பதாயும், 11,000 க்கு அதிகமான ஊழியர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாயும் மேலும் அறிவிக்கப்படுகிறது.

# மக்கோனுவில்

## காடையர் அட்டகாசம்

### விளையாட்டு வினையில் முடிந்தது

மக்கோணு, புதன்

அமைதியையே இருப்பிடமாகக் கொண்ட மக்கோணு மார்க்கெட் சதுக்கத்தில், சுமார் ஒருமணி நேரமாக, காடையரின் அட்டகாசம் தலைவிரித்தாடியது. "எல்லி" என்ற ஒருவகை விளையாட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கையில் இரு கட்சிகளுக்குமேற்பட்ட பூசலினுல்தான் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

காடையரின் 'விளையாட்டு' அரங்கில், தடிகள், ஆயுதங்கள், வெற்றுப் போத்தல்கள் உட்பட பல பொருட்கள் இடம் பெற்றன. இதைக் கண்டு பீதியடைந்த கடைக்காரர்கள் தங்களது கடைகளை மூடிவிட்டனர். அங்காடி வியாபாரிகள் அவதிப்பட்டனர்; போக்குவரத்தும் தடைப்பட்டது. விளையாட்டில் பங்குபற்றிய வீரருக்கு, கொண்டுவரப்பட்ட 'சோடா போத்தல்கள் மீண்டும் திரும்பப் போனபாடில்லை.

சம்பவத்தை கேள்வியுற்ற பொலிசார் அங்கு வந்ததும், அவர்கள் கண்களுக்கு உடைந்துகிடந்த போத்தல் துண்டுகள்தான் முதலில் சாட்சியமளித்தன. இது சம்பந்தமாக பலரை பொலிசார் விசாரணை செய்தனர். வெட்டுக்காயங்களுடன் ஒரு பெண் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். இரு கட்சியிலும் காயமடைந்த பலர், வெட்கப்பட்டு மறைவாகயிருக்கின்றனர்.

# 2 கிராமங்களில் இந்திய கொடியை நாட்டினர்

## கோவாவில் தேசிய வாதிகள் கிளர்ச்சி

புதுடில்லி, டிச. 13

**கோவாவில் தேசீய வாதிகள் நடத்தும் கிளர்ச்சியை ஒடுக்கு முகமாக, கடும் அடக்கு முறையை போர்த்துக்கேயர் அவிழ்த்துவிட்டிருக்கிருர்கள்.**

ஏராளமானேர் கைதாகி இருப்பதாயும், புதிய படைப் பலம் அங்கு வந்து குவிவதாயும் அறிவிக்கப்படுகிறது. தேசீய வாதிகள் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிருர்கள் என்றும், ஓரிடத்தை அவர்கள் தாக்கியதாகவும் அறிவிக்கப்படுகிறது. தெற்கு கோவாவில் 2 கிராமங்களில் தேசீய வாதிகள் இந்தியக்கொடிகளை நாட்டியதாக அறிவிக்கப்படுகிறது.

பம்பாயில் 10,000 கோவா மக்கள் கையெழுத்திட்ட ஒரு பத்திரத்தில் கோவாவை விடுவிக்க உறுதி தெரிவித்துள்ளனர்.

# "இந்தியாவுக்குள்ள உலக செல்வாக்குக்காரணம்"

## 'மனித உரிமையில் அது கொண்டுள்ள நம்பிக்கையே'

—மலாயா அரசர்

புதுடில்லி, டிச. 13

**மனித உரிமையில் இந்தியாவுக்குள்ள நம்பிக்கையே உலக நாடுகளில் அதன் செல்வாக்குக்குக் காரணம் என நேற்று செங்கோட்டையில் அளிக்கப்பட்ட வரவேற்பில் மலாயா அரசர் கூறினுர்.**

இந்திய மக்கள் தங்கள் பொருளாதார அபிவிரித்தியில் காட்டிவரும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும், அவர் புகழ்ந்துரைத்தார்.

மலாயாவிலுள்ள இந்தியர் அந்நாட்டைத் தங்கள் தாயகமாகக் கருதி, போற்றத்தக்க பணி புரிந்துவருவதாயும் அவர் தெரிவித்தார்.

மலாயா அரசருக்கு காஷ்மீர் விரிப்பும், அரசிக்கும் இளவரசிக்கும் காசி வஸ்திரங்களும் வழங்கப்பட்டன.

## மலேயா மன்னர்

### டிச. 17ல் மதுரை வருவார்

மதுரை, டிச. 13

மலேயா மன்னர் பெர்டுவான் அசாங் தம்முடைய மனைவி பெர்மைசூரியுடனும் மகள் மூலியா சல்வாவுடனும் இம்மாதம் 17-ம் ஆம் தேதி காலை சென்னையிலிருந்து இந்திய விமானப் படை, விமான மூலம் இங்கு வந்து சேருவார்.

## மாணவி தற்கொலை

தெரணியகலை, புதன்

புளத்கொகுபிட்டியாவிலுள்ள எல்கல்ல என்ற இடத்தைச் சேர்ந்த 17 வயதுள்ள பாடசாலை மாணவி என். ஆர். பொடிமெனிக்கா என்பவர், நச்சுத் திராவகம் உட்கொண்டு தற்கொலை செய்துகொண்டார்.

மரண விசாரணையின்போது இறந்தவரின் பெற்ருேர் கூறியதாவது: "சில காலமாக பொடிமெனிக்கா மகிழ்ச்சியில்லாதவாரகக் காணப்பட்டார். அவர் இறந்ததுக்கான காரணம் தங்களுக்கு இன்னும் தெரியவில்லை".

மாணவியின் மரணம் மர்மமாகவே இருக்கிறது. திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். பி. டெல்விற்ற தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

புதுடில்லி, டிச. 13

பகைநாகர்களிடம் கைதியாகச் சிக்கிய கொஹிமா துணைக் கமிஷனர், சித்திரவதையின் காரணமாக இறந்துபோய்விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

# கடங்கா யுத்த நிறுத்தத்துக்கு ஐ. நா. இணங்காது

## நேற்றைய சண்டையில் 2 இந்திய வீரர் பலி

புதுடில்லி, டிச. 13

கடாங்காவில் சண்டை நிறுத்தம் ஏற்படவேண்டுமென பிரிட்டன் கோரினுல் ஐ. நா. தலைமைக் காரியதரிசி திரு. யுதாண்ட் அதை நிராகரிப்பார் என அறிவிக்கப்படுகிறது.

எலிஸபெத்வில்லியில் கடாங்கா நிலையமொன்றை ஐ. நா. தாக்கியதாகவும் கடாங்கா விமானம் ஒன்றும் ஐ. நா. தலைமைக் காரியாலயம் மீது குண்டு வீசியதாகவும் அறிவிக்கப்பட்டது.

காங்கோவிலுள்ள ஐ. நா. படைக்கு, டுனிஸியா துருப்புக்களை அனுப்ப முன்வந்திருக்கிறது. (முன்பு டுனிஸியா காங்கோவிலிருந்து தம் துருப்புக்களை பெற்றுக்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.)

நேற்று ஒரு தாக்குதலில் 2 பாரத சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். மொத்தம் 10 பேர் மாண்டதாயும், 37 பேருக்குக் காயம் ஏற்பட்டதாயும், 13பேர் காயப்படவில்லை என்றும் அறிவிக்கப்படுகிறது.

## வார்ஸா மகாநாட்டில் அல்போனியா இல்லை

வார்ஸா, டிச. 13

வார்ஸாவில் நடைபெற்ற கிழக்கு ஐரோப்பிய பொருளாதார மகாநாட்டில் அல்போனியா கலந்துகொள்ளவில்லை. வழக்கமாக பார்வையாளராகக் கலந்துகொள்ளும் நவசீனுவும் இம்முறை பார்வையாளர்களை அனுப்பவில்லை.

## ஆஸி தேர்தல் கடும் போட்டி

சிட்னி, டிச. 13

ஆஸ்திரேலியத் தேர்தல் முடிவுகள் ஆளும்கட்சிக்கும் எதிர்க் கட்சிக்குமிடையே கடும் போட்டியைப் பிரதிபலிக்கின்றன. ஒன்றுரண்டு ஸ்தானங்களின் வித்தியாசத்திலேயே ஆளும் கட்சி வெற்றிபெறக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மடங்களை அகற்றுதீர்

ஊர்காவற்றுறை, புதன்

கதிர்காம மடங்களை அப்புறப்படுத்த வேண்டாம் என அரசினரைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்று சரவணை கிராம முன்னேற்றச் சங்கத்தினரால் நிறைவேற்றப்பட்டது. சங்கத் தலைவரும் வேலணை சிராமசபைத் தலைவருமான திரு. ப. கந்தசாமி கூட்டத்துக்குத் தலைமைவகித்தார்.

## கலைக்காட்சி ஒத்திவைப்பு

கொழும்பு, புதன்

நாளைமுதல் வருமிற 20-ம் திகதிவரை நடைபெறவிருந்த 1961-ம் ஆண்டுக் கலைக் காட்சி ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

## அமெரிக்க கிரகம்

கேப்கரன்வரல், டிச 13

அமெரிக்கா, 'டிஸகவரர்' ராக்கெட் ஒன்றை வானவெளிக்கு அனுப்பியது. 90 நிமிடத்திற்கொரு தடவை இது உலகவலம் வருவதாய்க் கூறப்படுகிறது.

### மணி வாக்கு

"என்கை உனக்கல்லால்
எப்பணியும் செய்யற்க"
கண்ணைத்துயின்று அவமே
காலத்தைப் போக்காதே."
— திருவாசகம்

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
கார்த்திகை மீ 29உ (14 12-61

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.

## பொதுமக்கள் சங்கடம்

பஸ் வேலை நிறுத்தம் பல நாள் தொடர்ந்து பரவி வருவதால் பொது மக்களின் சங்கடங்கள் அதிகரிக்கின்றன. இந்த வேலை நிறுத்தத்திற்கு அரசியல் நோக்கங்களே காரணமென்று, சில எதிர்க்கட்சிகள்மீது பிரதமமந்திரி பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகின்றார். ஆனால் எதிர்கட்சியைச் சேர்ந்தவர்கள் அரசாங்கமே இதற்குக் காரணமென்று கூறுகின்றனர். இதற்குக் காரணம் யாராயினும் உண்மையில் சங்கடப்படுவது பொது மக்கள் தான்.

பொது மக்களின் நன்மையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு மட்டுமன்றி எதிர்க்கட்சிகளுக்குமுண்டு. பஸ் போன்ற போக்குவரத்து சாதனம் மக்களின் அத்தியாவசிய சேவையாகும். இந்த சேவையில் எக்காரணம்பற்றியும் வேலை நிறுத்தம் ஏற்படுமாயின், அது பொது மக்களின் நலனையே பாதிக்கும். பொது மக்களின் வாக்குளைப் பெற்று, அவர்களின் நன்மையை பாதுகாக்க வாக்குறுதி அளித்துள்ள பார்லிமெண்ட் மெம்பர்கள் அனைவரும், இச்சேவையிலே வேலை நிறுத்தம் ஏற்படாமல் தடுக்கவும், ஏற்பட்ட வேலைநிறுத்தத்தை கூடிய சீக்கிரத்தில் ஒரு முடிவுக்குக் கொண்டுவரவும கூடிய முயற்சி எடுக்கக் கடமைப்பட்டவர்கள். இவ் விஷயத்தில் கட்சி முதலிய வேற்றுமைகளுக்கு இடமிருக்க முடியாது.

தனிப்பட்டவர்களின் நிர்வாகத்திலிருந்த பஸ் சேவையை தேச மக்களின் உடமையாக்கியபின், இ. போ. ச. ஊழியருக்குப் பல வசதிகள் ஏற்பட்டன. இன்னும் அவர்களுக்குப் பல குறைகள் உண்டு. அவையும் தீர்க்கப்பட வேண்டியனவே. ஆனால் இக்குறைகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் சுமுகமான முறையில் தீர்க்க முயல வேண்டும் கடைசி ஆயுதமாகவே வேலை நிறுத்த நடவடிக்கை எடுக்கலாம். திடீர் வேலைநிறுத்தம் பொது மக்களுக்கு மாறாக எடுக்கும் நடவடிக்கையாகவே முடிந்து. அவர்களது அபிமானத்தையும் ஆதரவையும் இழப்பதாக முடியும்.

சென்ற சில நாள் வேலை நிறுத்தத்தால் பல லட்ச ரூபாய்கள் நாட்டுக்கு நஷ்டம். வேலைநிறுத்தம் இன்னும் நீடிக்க நீடிக்க, இந்த நஷ்டம் அதிகரிப்பதுடன், பொதுமக்களின் சங்கடங்களும் மனக்கசப்பும் அதிகரிப்பதாக இருக்கும். மற்ற விஷயங்களில் கருத்து வேற்றுமை என்ன இருப்பினும், பொதுஜன நன்மையை முன்னிட்டு அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் ஒத்துழைத்து வேலை நிறுத்தத்தை உடனடியாக சுமுகமான ஒரு முடிவுக்குக் கொண்டுவர தங்கள் பூரண செல்வாக்கையும் பயன்படுத்த வேண்டும். இன்றேல் அவர்கள் பொதுமக்களுக்குத் தாங்கள் செய்ய வேண்டிய முக்கிய கடமையில் தவறியவர்களாவர்.

### எட்டுக் கிரகங்கள் கூடப்போவதால் ஏற்படவிருக்கும் பலன்

# இந்தியாவில் நூதன ஆட்சிமுறை

## அவதார புருஷன் தோன்றி அமைதி நிலைநாட்டுவர்

**நிரயன மகர ராசியில் எட்டுக் கிரகங்கள் கூடப்போவதால் உலகில் ஏற்படவிருக்கும் பலன்களை சண்டிலிப்பாய் திரு. வே. சுவாமிநாதன் இக் கட்டுரையில் கூறியுள்ளார். இக் கோளயோகத்தின் பின் பொதுவாக உலகில் உலகில் ஒரு புதுமையான வாழ்க்கை ஏற்படுமென்பது காற்கி முனிவர் கூற்று.**

ராகுவைத் தவிர ஏனைய எட்டு கிரகங்களும் 3-2-62 பிற்பகல் முதல் 6-2-62 பிற்பகல் வரை மகர ராசியில் கூடுவர்.

இப்படியாக எட்டு கிரகங்கள் ஒரு ராசியில் கூடுவதை பிரகத் சங்கிதையென்னும் நூல் கோள யோகமெனக் கூறும்.

எண்ணூறு வருடங்களுக்கு ஒருமுறை பல்வேறு ராசிகளில் எட்டு கிரகங்களும் கூடுவதுண்டு.

கால புருடனுக்கு கன்மஸ்தானமாகிய மகரராசியில் ஒரே பாகையில் எட்டுக் கிரகங்களும் கூடிய போதே கலியுகம் பிறந்ததென சில நாடி ஏடுகளில் கூறப்பட்டுள்ளது.

குமரி கண்டமும் பஃறுளி ஆறும் பன்மலை அடுத்த பாண்டியன் தலைநகர் கயடபுரமும் கடலில் மூழ்கிய காலம் அதுவென சில சங்க நூல்கள் கூறும்.

சரித்திரப் பிரசித்திபெற்ற மொகஞ்சதாரோ பூமிக்குள் புதையுண்டு இமையம் தோன்றிய காலமும் அதுவேயாகலாம்.

பூமத்திய ரேகையில் மகேந்திரமலை அடிவாரத்தில் இருந்ததாக கந்தப்புராணம் கூறும் இலங்கையும் அழிந்து சுவேதவராக கற்பமும் வைவஸ்வத மனு அந்தரமும் ஆரம்பித்த காலமும் அப்போது தானென சில நாடியில் சொல்லப்பட்டிருக்கிறது.

### இந்துசமுத்திரஆராய்ச்சி

அண்மையில் இந்து சமுத்திரத்தை ஆராய்ந்த ரஷ்ய விஞ்ஞான அறிவுக் குழுவின் தலைவர் பி. பெஸ்ருகௌ 20-2-61-ல் கல்கத்தாவில் நிகழ்த்திய விரிவுரை மேற்கூறியவை உண்மையென்பதை வலியுறுத்துகிறது.

இக் கால இலங்கைக்குத் தென் கிழக்கில் 550 கல் தொலையில் ஆழ்கடலில் 10,000 அடி உயர மலை உள்ளதென்றும் அம் மலைக்கு இந்து சமுத்திரத்தில் முதல் முறை கப்பல் ஓட்டிய ரஷ்யர் அவநாசிநிக்கிழன் இந்து சமுத்திரத்தில் முன் 10 கோடி நிலப்பரப்பு இருந்ததாய் மதிப்பிட்டதாகவும் கூறியுள்ளார்.

இம் முறை மகர ராசியில் ஒரேபாகையில் எட்டு கிரகங்களும் கூடாது கிரகங்களுக்கிடை 15 பாகை இடைவெளி இருந்த போதிலும் காற்கி என்னும் முனிவர் இக் கோள யோகத்தின்பின் 21-9-62 முதல் சுவேத வராக கற்பமும் வைவஸ்வத மனு அந்தரமும் முடிந்து பிரம கற்பமும் சூரிய சாவரணிமனுவும் ஆரம்பமாகுமென கூறியுள்ளார்.

அப்போது அயனம்சம் அவிட்ட நட்க்ஷத்திரத்தை கிட்டிவிடுமென்றும் அதன்பின் உலகில் ஒரு புதுமுறையான வாழ்வு தோன்றுமென்றும் கூறியுள்ளார்;

### உலக பலன்

திரிகால ஞான திருஷ்டியுள்ள ரிஷிகளே கூறமுடியாத இவ் எட்டுகிரக சேற்கையால் உலகில் நடைபெறப் போகும் பலனை எம்டோன்றவர்களால் கூறுவது முடியாதாகையால் ரிஷிகளால் உலக நன்மைக்காய் எழுதி வைத்த சில நாடி நூல்களில் நான் படித்த சில பாடல்களையும் வசனங்களையும் இங்கு எழுதியுள்ளேன்.

ஐரோப்பியர் கீழ் நாட்டிற்கு வந்து அதை ஆளும்காலம் 1910 ச்கு சரியான கலி 5011ல் தோற்றிய பிரமாண்டமான தூமகேது முதல், வரப்போகும் அஷ்டகிரக யோகம் வரையும், அதன் பின்னும், துருவ நாடிகாக்கை குசண்டர் நாடிகளில் கூறிய சில பாடல்களையும், வசனங்களையும் பார்த்தபின், அவன் அன்றி ஓர் அணுவும் அசையாதென் ஆன்றோர் கூறிய வாக்கை நம்பி கஷ்டபலனை சகித்து எங்களை ஈஸ்வரன் திருவடிக்கு அர்ப்பணித்தால், கஷ்டத்தின் பின் வரப் போவதாய்க் கூறப்பட்டுள்ள மிக நல்ல காலத்தில் சந்தோஷமாயிருக்கலாம்.

### ஐரோப்பியர் வருகை: 400வருடஆட்சி

ஒன்றதாம் பச்சமத்தின் ஓராழிக
    கடந்த தேயம் குன்றிடா காந்தர்வத்தின்
குலத்தவர் சதுர் நானூண்டு அன்றிந்த
    நாடாள் மார்க்கம் ஆகுமே அவரின் பாஷை
தொன்று தொட்ட நிலமெல்லாம்
    துலங்குதல் விந்தையாக.

### அலிஸ் கொம்மெட் தோற்றுதல்

பாரினில் கலி அன்பான் நூறு
    மாச்சே ஆச்சரிய மாகவே
நாலா ரொன்று
    அவனியில் நடந்தேற தூம கேது,
பூச்சரியம் பாகவே
    மாட்டியே யிளுப்பதற்கும் வையகத்தில்
மருவிடும்' அலிஸ் ஓர்
    பளிங்கு மை யா.

### முதலாவது உலக யுத்தம்

வாகுடனும் அவனையா கேளி
    சிம்மன் வராக நேத்திர அம்சம்
தான் மேதை மிக்க
    பாகுடனே சுற்றிவர இருவர் கூடி
பாகமாய் இருபுறேம தாக்கல் செயய
    சாகுமென வெடிகுண்டு பலமாய்
போட சாகரத்தில் கலமுடைக்க
    சரமுன் கொண்டல்

### காந்தி சுயாராச்சியம் கேட்டல்

கேளும் காண் தவமுனியே அன்னேனலே
    கிளர்ச்சியும் பலமாக சாத்வீகத்தில்
மீளும் காண் சுதந்திர மென்ற கொள்கை
    மேகவே பிறிந்ததென உலக மெல்லாம்
சூளும் காண் அன்னவனின் பேர்தானென்ன
    சூட்டுவேன் மோகின் கரம் செண்டாக
நீளும் காண் காந்தியென்ற குலத்தின் பேரு
    நிச்சயிக்க நான் உரைத்தேன் சாட்சிபாரே.

### இரண்டாம் உலக யுத்தம்

ஆதியாம் அரக்கர் போன்று அயல்
    தேசத் தரசருக்குள் வாதினல் அமர்உண்டாகி
மந்தனும் ஒவ்வோர் இல்லம் பேதமாய்
    தாண்டத் தாண்ட பிழைபல பரதகண்டம்
சேதமாய் விளக்கமின்றி செறிந்திடும்
    கடக வாசம்.

### சுயராச்சியத்தின் பின் பாஷைப் பிரச்சினை

கேளுமே பிரிந்தித பாஷை
    யென்று கிளரினர் அது
வொட்டி எல்லா ஞானம்
    சூழுமே இது வருகு முன்னதாக
சோதிக்கில் ஹிந்தி தாய்
    பாஷை யென்று
ஆளுமே யென்பதாகக் குறிப்பு
    முண்டு.

மேற்கூறியவை நடந்தேறி இந்தியா முழுவதும் ஹிந்தியால் ஆளப்படும்போலி. ருக்கையில் எட்டு கிரகம் கூடும் அக்கால உலக நிலையை மார்க்கண்டேயர் சத்தியா சாரியர் எனும் ரிஷிகளால் பின்காட்டியவாறு கூறப்பட்டுள்ளது.

### தடுமாற்றம்

இக்காலம் உலகில் பல இடங்களிலும் ஆட்சியாளரின் மனநிலை தடுமாற்றம் அடையும். பிரஜைகளின் மனம் பல வழியாலும் துன்பமுறும். உண்மை பேசுதல் கேலிக்கிடமாகும். பலர் ஒழுக்கத்தை கைவிட்டு கற்பு நெறிக்கு மாறானகொள் கைகளைக் கையாளுவர்.

சாதிப் பிணக்குகள் பாஷைப் பிணக்குகளேற்படுவதுடன் வர்ணச்சிரதர்மம் சிதைவுறும், தெய்வ பக்தி குறைந்து பகட்டு சீவியத்தை நாடுவதால் உயிர், பொருள் இரண்டிற்கும் ஆபத்து ஏற்படும்.

உலகில் மழையாலும், காற்றாலும், பூகம்பத்தாலும், கடல் பெருக்காலும், அதிக உஷ்ணத்தினாலும் அழிவுகள் ஏற்படும்.

மலையிலும், பள்ளத்தாக்கிலும், கடலிலும், ஆகாயத்திலும் பலவித நூதன அழிவுக் கருவிகளினால் அழிவு ஏற்படும்.

இமயம், பிரமபுத்திரா கங்கைப் பகுதிகள் அழிவுறும். பெரிய பட்டினங்களும் அடுக்கடுக்காய் கட்டடமுள்ள நாடும் அல்லோலகல்லோலப்படுமெனக் குறிக்கப்பட்டுள்ளது.

பரதகண்டத்தில் ஓர் நூதன ஆட்சி முறை ஏற்படுமெனவும் கூறப்பட்டுள்ளது.

எட்டு கிரகங்களுள் அங்காரகன் தனது உச்ச வீட்டில் காலசர்ப்பயோகத்திலிருந்து 15 பாகைவரை விலகிநிற்கின்றது. அதற்குரிய கண்டமாகிய தென் இந்தியாவில் திருப்பதி முதல் இலங்கைவரை, அதற்குரிய தெய்வம் முருகன் அருளால் சற்று கஷ்டம் குறையுமெனவும் கூறப்பட்டுள்ளது.

இக்கஷ்ட காலம் நீங்க மூன்று வருடம் செல்லுமென்றும் அப்போது ஓர் அவதார புருஷன் தோன்றுவாரெனவும் அதன் பின் இப்பூவுலகம் தெய்வலோகம்போல் காட்சி அளிக்குமெனவும் சொல்லப்பட்டுள்ளது. பின் சோதிடத்தில் கூறிய கிரகபலன்கள் பலனற்றுபபோய்விடுமெனவும் பாடப்பெற்றுள்ளது.

### ஐயாறன் எழுதுவது

நல்லூர் கோவிலிலிருந்து வழக்கம்போல் இன்று அதிகாலை 4 மணிக்கு பஜனை கோஷ்டி கிளம்பி, பல தெருக்களிலும் திருவெம்பாவை பஜனை செல்லுவதாக இரு அன்பர்கள் வந்து தெரிவித்து, இதை பலருக்கும் அறிவிக்கும்படி வேண்டினர்.

மற்றோர் அன்பர், வண்ணை சிவன்கோவிலிருந்தும் ஒரு கோஷ்டி அதே நேரத்துக்குக் கிளம்பி அவ்வட்டாரத்தில் பல தெருக்களிலும் பஜனை செய்வதாகத் தெரிவித்தார்.

இரு அன்பர்களும் மாணிக்கவாசகர் அருளிச்செய்த திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை பாடல்களடங்கிய சிறு நூல்களை அன்பளிப்பாகத் தந்தனர். ஒன்று சைவசமய ஞான விருத்தி நிலையத்தாரால் 'திருவாசகத்திரட்டு' என்ற பெயரிலும் மற்றொன்று கலைவாணிப் புத்தக நிலையத்தாரும் இலவசமாக வெளியிடப்பட்டது. இதைத்தவிர நேற்று தபாலில் கொக்குவில் இ. சி. இரகுநாதையர் வெளியிட்ட "திருப்பள்ளி யெழுச்சி, திருவெம்பாவை, திருப்பொற்சுண்ணம் என்ற நூலில் இரு பிரதிகளும் கிடைத்தன. விலை 25 சதம்.

இங்கு ஆஸ்திகம் எப்படிப் பரவி வருகிறதென்பதற்கு இவை நல்ல அடையாளங்களாகும்.

* * *

ஆனால் வானவெளி வீரரான மேஜர் ககாரினை பத்திரிகைப் பிரதிநிதிகள் கொழும்பில் சந்தித்து கடவுளைப்பற்றி சில கேள்விகள்கேட்டதற்கு, அவர் தமக்கு கடவுளில் நம்பிக்கையில்லை என்றும், தாம் வான் வெளியில்சென்றபோது அங்கு தமக்குக் கடவுள் தட்டுப்படவில்லை என்றும் ஒருவேளை தமது ராக்கெட் அதிக வேகமாகச் சென்றிருக்கலா மென்றும் சொன்னர்

இதை எழுதுகையில் உலகெலாம் சுற்றிய ஒரு மதபோதகரும் மனைவியாரும் வந்தனர். இதற்கு என்ன பதில் சொல்லுகிறீர்கள்? என்று கேட்டேன். தாம் மாஸ்கோசென்றபோது, கடவுளைப்பற்றி அங்கு பலரும் இதே கருத்தைக் கொண்டிருப்பதாயும், தாம் இருவரைவானவெளிக்குஅனுப்பியதாயும் அவர்களுக்குக் கடவுள் தென்படவில்லை என்று குருசேவும் கூறியிருப்பதாயும் அந்தப் போதகர் சொன்னர். கடவுளை பக்கத்திலேயே காண முடியாதவர்கள் வானவெளியில் எங்கு சென்றாலும் எப்படிக் காணமுடியுமென்று அவரது மனைவியார் கேட்டார்.

* * *

சிறுவயதில் படித்த ஒரு கதை ஞாபகம் வருகிறது. 'கடவுள் இருக்குமிடத்தைச் சொல் உனக்கு 2 ரூபாய் தருகிறேன்' என்று ஒருவர் கேட்டதற்கு, மற்றொருவர் "கடவுள் இல்லாத இடத்தைச் சொல் உனக்கு 4 ரூபாய் தருகிறேன்" என்றாராம்.

"அன்புதான் சிவம்" என்றார் திருமூலர். வானவெளியில் கோடிக்கணக்கான மைல் தூரம் சென்றாலும் அன்பைக் கண்டுபிடித்துக் கட்டிக்கொண்டுவரமுடியுமா?

என்றாலும் கடவுள் நம்பிக்கையுள்ளவர்கள்மீது தமக்கு மதிப்புண்டென்றும், அதே போல், தம்மையும் மற்றவர்

(5 ம் பக்கம் பார்க்க)

# எறிகுண்டு வழக்கில் இருவருக்கு மேலும் ரிமாண்ட்

யாழ்ப்பாணம், வியாழன்

எறிகுண்டு சம்பந்தமாக பொலிசாரால் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த இருவரையும் பொலிசாரின் விசாரணை முடிவடையாத படியாலும் அரசாங்கப் பரிசோதகரின் அறிக்கை வராதபடியாலும் மேலும் இரண்டு வாரங்களுக்கு இருவரையும் ரிமாண்டில் வைக்குமாறு யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் திரு. அரசுவால்டன் உத்தரவிட்டார்.

கடந்த 6ம் திகதி இவ்விஷயம் நீதி மன்றத்தில் எடுக்கப்பட்ட போது மேலும் இரண்டு வாரங்களுக்கு ரிமாண்டில் வைக்கவேண்டும் என்ற பொலிசாரின் கோரிக்கையை நிராகரித்து இம்மாதம் 13ம் திகதி வரை ரிமாண்டில் வைப்பதற்கு மாஜிஸ்ரேட் அனுமதியளித்திருந்தார்.

ஐந்து எறி குண்டுகள் வைத்திருந்ததாக திரு. மு. பரமலிங்கம், திரு. எஸ். கதிரவேலு ஆகியோர் கடந்தமாதம் 23ம் திகதி யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் வைத்துக் கைது செயயட்பட்டு மாஜிஸ்ரேட்டின் உத்தரவின் மீது அவர்கள் இருவரும் ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்.

இது சம்பந்தமாக திரு. எஸ். தவலிங்கம், திரு. கே. துரைசிங்கம், திரு. செ. சந்திரகாசன் ஆகிய மூவரும் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டு மாவட்ட உதவி நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது ரிமாண்டில் வைக்கவேண்டும் என்ற பொலிசாரின் கோரிக்கையை நிராகரித்து சந்தேக நபர்கள் மூவரையும் தலா ஆயிரம் ரூபாய் பிணையில் செல்ல அனுமதியளித்திருந்தது நினைவிருக்கலாம்.

குறிப்பிட்ட சந்தேக நபர் ஐவரும் நேற்று மீண்டும் யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் ஆஜரானர்கள். பிராசிக்கியூஷஸ்தரப்பில் பொலிஸ இன்ஸ்பெக்டர் திரு. தேவேந்திரா ஆஜரானர்.

திரு. ஏ. அமிர்தலிங்கம், திரு. எஸ். நடராசா, திரு. ஜிம்மி இராசரத்தினம் ஆகியோரின் அனுசரணையுடன் 3ம், 4ம், 5ம் சந்தேக நபர்களின் சார்பில் ஆஜரானர். திரு. ஏ. டி. ஜி. பிரிட்டோ, திரு. ஆர். விசுவநாதன் ஆகியோர் முறையே முதலாம், இரண்டாம் சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரானர்கள்.

பிராசிக்கியூஷன் தரப்பில் ஆஜரான திரு. தேவேந்திரா ரிமாண்டில் வைக்கப்பட்டிருக்கும் இரு சந்தேக நபர்களையும் மேலும் ரிமாண்டில் வைக்குமாறு கோரினர்.

திரு. ஏ. அமிர்தலிங்கம் இதனைப் பலமாக ஆட்சேபித்தார். சந்தேக நபர்களை மூன்றாவது முறையாகவும் ரிமாண்டில் வைப்பதற்குச் சட்டம் அனுமதிக்கவில்லையெனவும் வழக்குத் தாக்கல் செய்வதற்கு முன்பு அப்படி வைத்திருக்க முடியாதெனவும் இவ்வழக்கை நடத்தும் அதிகாரி இல்லாமல் அவரின் பிரதிநிதி ஆஜராகியிருந்து" விசாரணை நடாத்த முடியாதெனவும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

இவ் வழக்கை நடத்தவேண்டிய அதிகாரியான யாழ்ப்பாணம் பொலிஸ் உதவி சுப்பிரிண்டன் திரு. குணவர்த்தன கோர்ட்டில் ஆஜராகி இருக்கவில்லை. அவரை பத்து நிமிஷங்களுக்குள் நீதிமன்றத்திற்கு வரும்படி அழைக்க முடியுமா? என மாஜிஸ்ரேட் பொலிஸ் இன்ஸ்பெக்டரை வினவினர். தான் அவரின் சார்பாக ஆஜராகியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

மீண்டும் சந்தேக நபர்களை ரிமாண்டில் வைப்பது சம்பந்தமான சட்டப் பிரச்சினை நீண்ட நேரமாக பிரஸ்தாபிக்கப்பட்டது.

திரு. பிரிட்டோ பொலிசாரின் கோரிக்கையை ஆட்சேபித்து சந்தேக நபர்களை 14 நாட்களுக்கு மேல் ரிமாண்டில் வைக்க முடியாதெனத் தெரிவித்தார்.

பொலிசாரின் விசாரணை முடிவடையாதபடியாலும் அரசாங்க பரிசோதனை அறிக்கை வராமையாலும் மேலும் ரிமாண்டில் வைக்க வேண்டுமெனத் திரு. தேவேந்திரா தெரிவித்தார்.

விசாரணை நடைபெறும் கட்டத்தில் தான் இச் சம்பவம் இருக்கிறதா என்பதை கோர்டாரே முடிவு செய்ய வேண்டுமென திரு. பிரிட்டோ கேட்டுக்கொணடார்.

இந் நிலையில் இம்மாதம் 27ந் திகதிவரை முதலாம் இரண்டாம் சந்தேக நபர்களை ரிமாண்டில் வைக்குமாறும் மற்றவர்களை அதே பிணையில் செல்லுமாறும் மாஜிஸ்ரேட் உத்தரவிட்டார்.

## ஐயாறன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கள் மதிக்கவேண்டுமென்றும் சொன்னர் ககாரின்.

இந்தியப் பிரதமர் நேருவுக்குக்கூட கடவுளில் நம்பிக்கையில்லை, அவரையும் பரமஆஸ்திகரான மகாத்மா காந்தி தமது வாரிசாக நியமித்தார். சமீபகாலமாக நேருஜி, கடவுள், ஆன்ம சக்தி என்று அடிக்கடி பேசிவருகிறர். குருசேவ்கூட சமீபத்தில் கடவுளைப்பற்றிக் குறிப்பிட்டார். உரிய காலம் வரும்போது வாலிபரான ககாரினும் ஆஸ்திகராகலாம். இது அவரது சொந்த விஷயம். மேலும் அவருக்குள்ளும் கூட கடவுள் இருந்து, அவரே இப்படிப் பேசவைக்கிறரென்று நம்பும் ஆஸ்திகர் அவரை அவமதிப்பார்களா?

## ஊரெழு கொலை வழக்கு
### 27ந் திகதி தொகுப்புரை

யாழ்ப்பாணம், வியாழன்

ஊரெழு கொலை வழக்கு நேற்று மீண்டும் யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இம்மாதம் 27ம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இம்மாதம் 27ம் திகதி திரு ஜி. ஜி. பொன்னம்பலமும், முடிக்குரிய வழக்கறிஞரும் தமது தொகுப்புரைகளை நிகழ்த்துவார்களெனத் தெரிகிறது.

---

## கான்ஸ்டபிள்மீது அசிட் வீசிய குற்றச்சாட்டு
### கான்ஸ்டபிள்மீது வழக்கு

காங்கேசன்துறை, புதன்

காங்கேசன்துறை பொலிஸ் பகுதியில் இவ்வருடம் நவம்பர் மாதம் 7ம் திகதி நள்ளிரவு நித்திரை செய்துகொண்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் மகேந்திரசிறி மீது அஸிட் திராவகம் வீசப்பட்டதையொட்டி சந்தேகத்தின்மீது காங்கேசன்துறைப் பொலிசாரினல் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிபதியினல் பிணையில் விடப்பட்டிருந்த சுன்னகம் பொலிஸ் கான்ஸடபிள் விக்கிரமசுந்தரா, காங்கேசன்துறை பொலிஸ் நிலையச் சமையல்காரன் ஏ. ஜெயசேன ஆகிய இருவரும் நேற்று மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் ஆஜரானபோது காங்கேசன்துறைப் பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஏ. எஸ். மரியநாயகஞ, விக்கிரமசுந்தரா மீது கொலைசெய்ய முயன்றதாகக் குற்றஞ்சாட்டி வழக்கைத் தாக்கலசெய்தார்.

சமையல்காரன் ஜெயசேன மீது பொலிசார் வழக்குப் பத்திரம் தாக்கல் செய்யாமையால் நீதிபதி ஜெயசேனவை விடுதலை செய்து வழக்கை அடுத்தமாதம் 11ம் திகதிக்கு விசாரணைக்காக ஒத்திவைத்தார்.

## கடாங்காவில் ஐ. நா. நடவடிக்கை
### இந்தியா பூரண ஆதரவு; பிரிட்டன் கருத்துவேற்றுமை
### பிரதமர் நேரு தகவல்

புதுடில்லி, டிச. 13

"காங்கோவில் ஐ.நா.நடவடிக்கையை இந்தியா பூரணமாக ஆதரிக்கிறது" என்று பாரதப் பிரதமர் ஸ்ரீ நேரு இன்று ராஜ்ய சபையில் தெரிவித்தார்.

உண்மையில் ஐ. நா. நடவடிக்கையின் பொறுப்பு இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று ஸ்ரீ நேரு கூறினர்.

ஐக்கிய காங்கோவை பிரிட்டன் ஆதரிக்கிறதென்றாலும் கடாங்காவில் ஐ. நா.வின் நடவடிக்கையை பிரிட்டன் பூரணமாக ஆதரிக்கவில்லையென்றும் இது சம்பந்தமாக அமெரிக்கா முதலிய நாடுகளுக்கும் பிரிட்டனுக்கும் இடையில் கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளதாகவும் ஸ்ரீ நேரு தெரிவித்தார்.

காங்கோ சம்பந்தமாக ஐ. நா. வின் நடவடிக்கையை அமெரிக்கா சொல்லளவில் மட்டுமல்ல செயலிலும் ஆதரித்துள்ளதென்று பிரதமர் நேரு மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

பிரிட்டனின் நடவடிக்கைக்கு ரொடீஷிய சம்மேளனத்தின் தூண்டுதல் காரணமாக இருக்கலாமென்றும் ஸ்ரீ நேரு தெரிவித்தார்.

## கடாங்காவின் பெரிய கட்டடம் ஐ. நா. வசமானது
### மேலும் இரு இந்தியவீரர் பலி

நியுயோர்க், டிச. 13

கடாங்காவின் தலை நகரான எலிஸபெத்வில்லியில் மிக முக்கியமும் உயரமும் உள்ள பெரிய கட்டிடத்தை கடாங்கா துருப்புக்களிடமிருந்து ஐ. நா. படையைச் சேர்ந்த எத்தியோப்பியத் துருப்புக்கள் இன்று கைப்பற்றிக் கொண்டன. இக் கட்டிடத்திலிருந்து கடாங்கா துருப்புக்களும் கடல் படையின்ரும் ஐ. நா. படையினருக்குப் பெரும் தொந்தரவு கொடுத்துவந்தனராம். இக் கட்டிடத்தைக் கைப்பற்றியதொரு சாதனையெனக் கருதப்படுகிறது.

எலிஸபெத்வில்லியிலிருந்து ஐ. நா. தலைமைக் காரியாலயத்தின் மீது கடாங்கா துருப்புக்கள் நடத்திய தாக்குதலில் இரண்டு இந்திய வீரர் மாண்டதாகவும் மற்றும் மூவர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

ஜாடோட்வில்லியில் ஐ. நா. படை நடத்தியதாக்குதலில் கடாங்காவின் போர் விமானமொன்றும் கவச மோட்டார்களிரண்டும் நாசமாகிவிட்டனவாம். ஜாடோட்வில்லியிலுள்ள கடாங்கா படையினரின் சில இலக்குகளை ஐ. நா. படையினர் தாக்கியதாகவும் அறிவிக்கப்படுகிறது.

எலிஸபெத்வில்லிக்குச் சமீபமாகவுள்ள பாலுபா ஜாதியினரின் இடத்தைக் கைப்பற்ற முயன்ற கடாங்கா துருப்பினரின் முயற்சியை ஐ. நா. படையினர் முறியடித்துவிடடனர்.

ஐ. நா. உதவி அதிகாரி திரு. ரால்வ்பஞ்ல இன்று லியப்போல்ட்வில்லி வந்து சேர்ந்தார். நிலைமையை அறிந்து செல்லவே தாம் வந்திருப்பதாகவும் உத்தரவு எதுவும் பிறப்பிக்கத் தாம் வரவில்லையென்றும் அவர் சொன்னர்.

## புதுடில்லியில் அமெரிக்க வாலிபன் பரிதாப மரணம்

புதுடில்லி, டிச. 13

பதினறு வயது அமெரிக்க இளைஞன் ஒருவன் தன் வீட்டில் பத்திரமாக பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த, அமெரிக்க உள்நாட்டு யுத்தத்தில் பயன்படுத்திய துப்பாக்கி ஒன்று எதிர்பாராமல் வெடித்ததால் கொல்லப்பட்டான் என்று இங்குள்ள அமெரிக்க தூதரக அதிகாரி ஒருவர் கூறினர்.

அவனைத்தவிர வேறுயாரும் இல்லாத அந்த அறையில் அந்த துப்பாக்கி எப்படி வெடித்தது என்பது தெரியவில்லை.

இங்கு, தொழில்நுட்ப ஒத்துழைப்பு மிஷனில் வேலைபார்த்து வரும் அமெரிக்கப் பெண்ணின அந்தப் பையனின் தாய் அவனை அழைத்துக்கொண்டு மாதா கோவிலுக்குப் புறப்படுவதற்காக அவன் அறைக்குள் நுழைந்தபோதே பையன் ரத்த வெள்ளத்தில் கிடப்பது தெரியவந்தது. உடனே ஆஸபத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டான். அங்கு டாக்டர்கள் அவன் நெற்றிப்பொட்டில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்திருப்பதைக் கண்டு, பிறகு அவன் மூளையிலிருந்து, பழைய மாடல், ரவுண்டு தோட்டா ஒன்றை எடுத்தனர். பையன் பிறகு இறந்துவிட்டான்.

---

## முதலில் செயல்; பின்னல் பேச்சு

பெங்களூர், டிச. 13

"போர்த்துக்கீசியர் ஆதிக்கத்திலிருந்து முதலில் கோவாவை விடுத்துவிட்டு அதன்பின்னர் அதைப்பற்றிப் பேசுங்கள்". என்று சோசலிஸடுத் தலைவர் டாக்டர் ராம் மனேகர் லோகியா இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார்.

டாக்டர் லோகியா மைசூர் மாநிலத்தில் தற்போது சுற்றுப்பிரயாணம் செய்துவருகிறர்.

நமக்கிருக்கும் மிகப் பெரிய குறை எல்லாம் நாம் பேசுவது அதிகம், செயல்படுவது குறைவு. தீவினைப் பயனுக கோவா விவகாரத்தில் இந்திய அரசாங்கம் மேற்கண்ட நமது குறைபாட்டை அம்பலமாக்கிக்கொண்டிருக்கிறது என்று திரு. லோகியா மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

## லொறியில் அகப்பட்டு 3 வயதுச் சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம், புதன்

கவலையீனமாக வீதியைக் கடந்து ஓடிச் சென்ற மூன்று வயதுச் சிறுவன் ஒருவன் இராணுவ லொறியொன்றுக்குள் அகப்பட்டு ஸ்தலத்திலேயே மரணமானர். இச்சம்பவம் யாழ்ப்பாணம் ஆஸ்ப்பத்திரி வீதியில் சிங்கள மகாவித்தியாலயத்துக்கு முன்பாக நடைபெற்றது.

வடபகுதி விவசாய உத்தியோகஸதர் திரு. என். சிவமுத்துலிங்கத்தின் மகனை முகுந்தன் (வயது 3) மரணம் சம்பந்தமாக திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசாரணை நடத்தினர்.

குறிப்பிட்ட இராணுவ வண்டியை பி. டபிள்யூ. ஹீன் பண்டா என்பவர் ஓட்டிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இறந்த குழந்தையின் தயாரான திருமதி விமலாதேவி சிவமுத்துலிங்கம் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

சம்பவம் நடைபெற்ற தினத்தன்று நானும் எனது மூன்று பிள்ளைகளும் ஆஸ்பத்திரி வீதியில் சிங்கள மகாவித்தியாலயத்துக்கு முன்னுள்ள எனது சகோதரியின் வீட்டுக்கு வந்திருந்தோம். அன்று பிள்ளைகள் சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்தார்கள். முகுந்தன் சிற்றன்னையிடம் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டான் சகோதரி தண்ணீர் எடுப்பதற்காக சமையலறைக்குச் சென்றார். நான் குழந்தைகளுக்குச் சாப்பாடு கொடுத்துக் கொண்டிருந்தேன். சிறிது நேரத்தில் முகுந்தனைக் காணவில்லை. அங்குள்ள வேலைக்காரனிடம் விசாரித்தேன். தெருவண்டை நிறுத்தப்பட்டிருந்த எங்கள் மோட்டார் காருக்குள் இருப்பதாகத் தெரிவித்தான். முகுந்தன் குறும்புக்காரனுகவிருந்தபடியால் நான் உடனே அவ்விடத்துக்குச் சென்றேன். அங்கு அவன் காயங்களுடன் படுத்திருட்பதையும் இராணுவ வண்டியொன்று நிறுத்தப்பட்டிருப்பதையும் கண்டேன். நான் பிள்ளையை இராணுவ வண்டியில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றேன். அவர் இறந்துவிட்டதாக அறிவித்தனர்.

இராணுவ சிப்பாயான திரு. ஏ. ஜி. எம். கசின் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

சம்பவம் நடைபெற்ற தினத்தன்று நான் குறிப்பிட்ட இராணுவ வண்டியில் சாரதிக்கு அருகில் உட்கார்ந்து சென்றேன். பக்கத்திலுள்ள சந்தியில் சில வண்டிகளுக்கு வழிவிட்டு ஓட்டிவரப்பட்டது. அப்போது 5—8 மைல் வேகத்தில் வண்டி ஓட்டி வரப்பட்டது. திடீரென எங்கள் வண்டி நிறுத்தப்பட்டது. ஏன் வண்டி நிறுத்தப்பட்டது? என நான் சாரதியைக் கேட்டேன். பின்னுக்கு ஏதோ சத்தம் கேட்பதாக அவர் தெரிவித்தார். நாங்கள் சென்று பார்த்தபோது குழந்தை வீதியின் நடுவே கிடக்கக் கண்டோம். யாரோ ஒரு பெண் வந்து குழந்தையைத் தூக்கிச் சென்றர். அவ்வழியே வந்த இன்னெரு இராணுவ வண்டி மூலம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தோம்.

கே. பெருமாள், எஸ். நிக்லஸ்பிள்ளை ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ வேலும்மயிலும் பிரேத பரிசோதனை நடத்தினர்.

விபத்தினல் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# அற்ப விஷயத்துக்கும் வேலை நிறுத்தம்செய்கிறார்கள்

## இ. போ. ச. ஊழியர்பற்றி மந்திரி இலங்கரத்ன

அநுராதபுரம், புதன்

"நாங்களும் வேலை நிறுத்தம் செய்திருக்கிறோம். சகல வித முயற்சிகளும் பயன் அளியாத பின்னரே நாம் வேலை நிறுத்தம் செய்ய எத்தனித்தோம். பஸ் சேவைகள் தேசியமயமாக்கப் பட்டபின்னரும் சுதந்திரமாக வேலைசெய்துவந்து இ. போ. ச. ஊழியர்கள் ஒரு சுற்றறிக்கை போன்ற அற்ப விஷயத்துக்கு வேலை நிறுத்தம் செய்வதற்கு இப்போது துணிந்துள்ளார்கள்."

இவ்வாறு வர்த்தக அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்ன அநுராதபுரத்தில் ஓர் அரசாங்க சிமிந்தி டிப்போவின் திறப்பு விழாவிற் பேசும்போது குறிப்பிட்டார்.

கைத்தொழில் உள்நாட்டுக் கலாச்சார அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா ஒரு நாடாவை வெட்டி டிப்போவைத் திறந்து வைத்தார்.

காங்கேசன்துறை சிமிந்தியின் விலை பக்கட் ஒன்று 8 ரூபாய் 50 சதமாயிருந்தபோதிலும் அநுராதபுர மக்கள் அதற்குப் 11 ரூபாய் 50 சதம் கொடுத்து வாங்குகின்றனர், என்று திரு. சேனநாயக்கா கூறினர். காங்கேசன் சிமிந்தியை உத்தரவாத விலையின்படியே மக்கள் பெற்றுக்கொள்ளும் வகை செய்யுமுகமாக இத்தகைய 18 அரசாங்க டிப்போக்களை வெவ்வேறு இடங்களில் தாம் நிறுவ இருப்பதாகத் திரு. சேனநாயக்கா கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் சிமிந்தி விற்பனையையும் கூ. மொ. வி. தாபனம் செய்து வரும். வெகுவிரைவில் இன்னும் இரண்டு சிமிந்தித் தொழிற்சாலைகள் சிமிந்தி உற்பத்தி செய்யும். 1965-ம் ஆண்டளவில் இலங்கை தனது சிமிந்தித் தேவைகளுக்கு வெளிநாடுகளை நம்பியிருக்கவேண்டியதில்லை.

# மகாநாடு கூட்டி சமரச முடிவு காணவேண்டும்

## இ. போ. ச. வேலைநிறுத்தம் பற்றி திரு. செல்லையா

நாவலப்பிட்டி, புதன்

"இலங்கை போக்குவரத்துச் சபைத் தலைவரின் புதிய ஒழுங்கு நடவடிக்கை பஸ்ஊழியர்கள் மீது சந்தேகம்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை உண்டுபண்ணியுள்ளது. அற்ப காரணங்களுக்காகவும் வேலை நீக்கம் செய்யும் உரிமை டிப்போ மனேஜர்களுக்கு உண்டு." இவ்வாறு ல. தோ. தொ. யூனியன் பொதுக்காரியதரிசி திரு. எஸ். செல்லையா நாவலப்பிட்டியில் நமது நிருபருக்கு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்ததாவது:-

"போக்குவரத்து சபையில் அங்கம் வகிக்கும் பிரதிநித்துவம் தொழிலாளர்களுக்கும் அளிக்கப்படவேண்டும். தொழிலாளர் வேலைக்குத்திரும்பினால்தான் சமரசம் பேசுவதென்பது எந்த முற்போக்கு நாட்டிலும் இல்லாத கொள்கை. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பேச்சளவில்தான் முற்போக்குக் கொள்கையை கடைப்பிடிப்பதாக கூறுவதேதவிர செயலளவில் யு. என். பி. க்கும் இதற்கும் வித்தியாசமில்லை.

தேசிய அபிவிருத்தி வரியும் பஸ் ஊழியர்களைப் பாதித்துள்ளது. இந்த வேலை நிறுத்தம் நீதி நியாயமாகத தீர்க்கப்படாவிட்டால் இதர தொழிற்சங்கங்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடலாம். எனவே அரசாங்கம் வீண் பெருமை பேசாமல் ஓர் மகாநாட்டைக் கூட்டி சமரசமாக முடிவுகாண முயலவேண்டும்.


விற்பனையாகின்றன !

**1962-ம் ஆண்டு தினக்குறிப்பு.**

மாணவர்களுக்கெனவும்

மற்றும்

பொதுவாகப் பாவிக்கக்கூடியதும்.

இதில் அனேக விசேஷ அம்சங்களுண்டு.

விலை சதம் 75

**ஈழநாடு லிமிட்டெட்**

63, சிவன் கோவில் மேலை வீதி, யாழ்ப்பாணம்.

— விற்பனையாளர் —

**தமிழ்ப் பண்ணை**

193, கே. கே.எஸ். வீதி, — யாழ்ப்பாணம்.


## கிராமச்சங்க தேர்தல்

பருத்தித்துறை, புதன்

புலோலி கிராமச் சங்கத்திக்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்கான வாக்களிப்புகள் இம்மாதம் 23-ம் திகதியன்று நடைபெற இருக்கின்றன.

மொத்தம் 12 வட்டாரங்களில் 7 வட்டார வாக்காளர்கள் தங்கள் வட்டாரங்கட்கு போட்டிகள் நடைபெறுவதைத் தவிர்த்து அங்கத்தவர்களை அனுப்பியுள்ளனர்.

ஏனைய 5 வட்டாரங்களில் மட்டுமே வாக்களிப்பு நிகளும். 4-ம், 5-ம், 8-ம், 11-ம் வட்டாரங்களிலும் இருவரும் 12-ம் வட்டாரத்தில் மூவரும் போட்டியிடுகின்றனர்.

---

## ஆலோசனைக் கூட்டம்

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறை, உடுப்பிட்டித் தொகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் பாடசாலைகளைத் தரம் பிரிப்பது சம்பந்தமாக ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடாத்தினர்.

வடமராட்சித் தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் வித்துவான் சி. இ. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இவ்வாலோசனைக் கூட்டத்தில் சங்க நிர்வாகஸ்தர்களும் பல்வேறு பாடசாலைகளின் தலைவர்களும் கலந்துகொண்டனர். சுமார் மூன்று மணித்தியாலநேரம் இவ்வாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

---

## மானநஷ்ட வழக்கு

பருத்தித்துறை, புதன்

திருட்டுக் குற்றம் சாட்டப்பட்ட நபர் அவ் வழக்கில் விடுதலையானதும் வழக்குத் தொடர்ந்தவர்மீது தம்மை நீதிஸ்தலத்தில் குற்றம்சாட்டி அவமதித்ததாக ரூபா 2000 நஷ்டஈடுகோரி வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

கரவெட்டி வடக்கு மகேசன் பொன்னம்மா என்பவரே கரவெட்டி மேற்கைச் சேர்ந்த தனா. மரியநாயகம்மீது 2000 ரூபா நகையைத் திருடியதாக தாக்கல் செய்திருந்தார். மரியநாயகம் நஷ்டஈடு கோரியிருக்கிறார்.

# தோட்டத் தொழிலாளருக்கு பலகோணத்திலும் துன்பம்

## தொழிற்சங்க மாவட்ட பிரதிநிதி பேச்சு

புசலாவ, புதன்

"இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அடுத்தடுத்துசெய்த பிழைகள்தான் இன்று தோட்டப்பகுதிகளில் இந்தியனே உதவாது என்று பேசும் அரசியல்கட்சிகள் தொழிற்சங்கப் போர்வையில், நடமாடுவதற்குக் காரணம். தேசீயரீதியிலும் சர்வதேசிய ரீதியிலும் தொழிலாளப் பெருமக்களை இன, மத பேதங்களின்றி வர்க்கப்போராட்டப் பாதையில் அழைத்துச் செல்லும் உண்மை மிகுந்த ஒரு இடதுசாரிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சிக்கு காங்கிரஸ், அன்றும் இன்றும் ஒத்துழைப்புத் தராமல் தட்டிக்கழித்த தவறுதல்கள் காரணமாகத் தொழிலாளர்கள் மத்தியில் வர்க்க உணர்ச்சி மேவாமல் போய்விட்டது."

இவ்வாறு லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் நாவலப்பிட்டி ஜில்லாப் பிரதிநிதி திரு. யூ. நவரட்ண புசலாவ மாவட்டத் தலைவர்கள் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார். திரு. என். எம். பி. முத்துசாமி இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

திரு. நவரட்ண மேலும் தொடர்ந்து பேசும்பொழுது குறிப்பிட்டதாவது:-

"காங்கிரஸ் ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும் நிர்வாகிகள் காந்தீயம்பேசும் ஜனநாயகவாதிகள் என்று கூறப்படுகிறது. மகாத்மாவின் அடிப்படைக்கொள்கைகளில் அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்திருக்கும் இவர்கள் அஹிம்சையையும், தேசீயத்தையும் காப்பாற்றுதது விந்தையாக இருக்கின்றது. அரசாங்கத்தைக் கைப்பற்றும் அரசியல் கட்சிகள் தேசீய ஒற்றுமையை உருவாக்கவேண்டும். ஆனால் துரதிருஷ்டவசமாக இந்நாட்டில் அதற்கு ஏராளமான பஞ்சம்!"

பிரஜாவுரிமைப் பிரச்சினைகள் முதற்கொண்டு அன்றாட பிரச்சினைகள்வரை பல கோணத்திலும் தோட்டத் தொழிலாளர்கள் நெடுகிலும் துன்புற்று வந்தவண்ணமாகவே இருக்கின்றனர் என்றும் கூறினர்.

---

## 'சமய அறிவு முக்கியமானது'

### — உதவி வித்தியாதிபதி

ஹொரணை, புதன்

"முற்காலத்தில், கிராமக் குழந்தைகள் காட்டில் மலர்ந்த மலர்களைப்போல யாரும் தங்களைப் பார்க்கவோ அன்றி அறியவோ முடியாத நிலையில் இருந்தனர். ஆனால், தேசிய கல்வித்திட்டத்தின் கீழ், இந்த மலர்களை மணங்கமழும் நறுமலர்களாக மாற்ற அரசாங்கம் திட்டமிட்டுள்ளது".

இவ்வாறு, பதக்கட அரசினர் கல்லூரியில் நடைபெற்ற கலைகைப்பணி கண்காட்சியைத் திறந்துவைத்த மேற்குப் பகுதி உதவி வித்தியாதிபதி திரு. சந்திராரத்ன மகன்தில தமது உரையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது: "பாடசாலைகளில், சமயக் கல்வியை ஒரு தனிப்பட்ட பாடமாக போதிக்க முடியாது. ஒருவருடைய மதமும் வாழ்க்கையும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளில் பயிலும் குழந்தைகளுக்கு சமய அறிவு முக்கியமானதொன்றாகும்.

---

## பதுளையில் வேலைநிறுத்த கஷ்டம்

பதுளை, புதன்

வேலை நிறுத்தம் செய்யும் இ. போ. ச. ஊழியர்கள் இரவு முழுவதும் பதுளை 'கராஜ்' முன்பு பாட்டுப்பாடி 'பைலா' ஆடி மகிழ்ந்தனர். அசம்பாவிதம் நடவாதவாறு போலீஸ் பாரா எங்கும் இருந்தது. தனியார் வாகனங்களால் நிலைமையை சமாளிக்கமுடியவில்லை. மும்மடங்கு கட்டணம் செலுத்தியும் சிலரால் பயணம் செய்ய இடம் கிடைக்கவில்லை. ஜீ. ஸி. ஈ. மாணவர்கள் பெரிதும் பரீட்சை எழுத முடியாமல் போனது குறிப்பிடத்தக்கது.

# விசாவரி செலுத்தத் தவறினல் வழக்குத் தொடரப்படும்

கொழும்பு, புதன்

இலங்கையில் வதியும் இலங்கையரல்லாத ஏனைய மக்கள் குடியிருப்பு விசாவரி செலுத்தத் தவறினல் அவர்கள் மீது வழக்குத் தொடரப்படும் எனத் தெரிகிறது. வருடாந்த குடியிருப்பு விசாவரியாக 400 ரூபாய் செலுத்தத் தவறியுள்ள இலங்கையரல்லாத இலங்கைவாழ் மக்கள் சிலர் மீது, குடியேற்ற வெளியேற்றக் கட்டுப்பாட்டதிகாரி ஏற்கெனவே வழக்குத் தொடர்ந்துள்ளார் எனத் தெரிகிறது. இவர்கள்மீது வழக்கு நடவடிக்கை எடுக்குமுன்னர் விசாவரிபற்றி நினைவூட்டுமுகமாக இலாகா இவர்களுக்குப பல தடவைகள் கடிதமனுப்பியிருந்தது. கடைசியாக அனுப்பப்பட்டிருந்த கடிதத்தில்; கடிதம் கிடைத்த இருவாரங்களுக்கிடையில் விசாவரி செலுத்தப்படாவிட்டால் வழக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. விசா ரத்துச் செய்யப்படவும்கூடும் எனவும் அவர்கள் பயமுறுத்தப்பட்டிருந்தார்கள்.

---

## கண்ணின் மணிகள்

கொழும்பு, புதன்

கண்ணின் மணிகளைப் பாதுகாத்து வைப்பதற்கான சேமிப்பு வங்கி ஒன்றை நிறுவவிருப்பதாய் சுகாதார மந்திரி அறிவித்திருக்கிறார்.

## கஞ்சா சேனை கண்டுபிடிக்கப்பட்டது

பசறை, புதன்

பசறை உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் அசோகா ஜயவர்த்தனவுடன் சென்ற ஒரு பொலிஸ் கோஷ்டி, வலஸ்எல்ல என்ற கிராமத்தில் கஞ்சா சேனையொன்றை கண்டுபிடித்தது. பசறையிலிருந்து சுமார் 12 மைல் தூரத்திலுள்ள இந்த இடத்தில், பூரண வளர்ச்சியடைந்த 150 கஞ்சா செடிகள் இருந்தனவாம். இது சம்பந்தமாக ஆர். எம். குணவர்த்தன, குணசிங்கி ஆகிய இரு சகோதரர்களும் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடப்பட்டனர்.

---

## தபால் விநியோகம் தடைப்பட்டது

கொழும்பு, புதன்

இ. போ. ச. ஊழியர்களின் வேலை நிறுத்தத்தால் தபால் கந்தோர்கள் பாரதூரமான வகையில் பாதிக்கப்பட்டுள்ளன. சில பகுதிகளில் தபால் விநியோகமும் தடைப்பட்டுள்ளது.

## வருட சேவைக்கு 2 மாத சம்பளம்?

பசறை, புதன்

மொனருகலையைச் சேர்ந்த மொனருகலை குருப் தோட்ட ஆசிரியை திருமதி என். மரகதம் என்பவர் அதே தோட்டத்தில் கடந்த ஒரு வருட சேவை செய்தும் 2 மாதச் சம்பளமே கிடைத்துள்ளது.

பதுளை தமிழாசிரிய சங்கச் செயலாளர் திரு. அ. கிரிகோரி இது சம்பந்தமாக தோட்ட நிர்வாகத்திற்கு எழுதியுள்ளார்.

தோட்டத்துரை தற்பொழுது வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதால் கடிதத்திற்கு பதில் இன்னும் வரவில்லை. எனத் தெரிகிறது.

---

## உதைபந்தாட்டம் ஒத்திவைப்பு

வவனியா, புதன்

வவனியாவில் நடைபெற்றுக்கொண்டுவந்த உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டி விடாது பெய்யும் மழை காரணமாக தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. மழை வெளித்ததும் மீண்டும் ஆட்டம் தொடர்ந்து நடைபெறும்.

# இப்பொழுது...

## புத்தம் புதிய, மிகவும் சுவையான மோல்டட் பால்... வாங்கக் கூடியவற்றில் தலைசிறந்தது!*




ஸல் — குறைந்த விலையில் தினசரி உபயோகத்துக்கான புதிய மோல்டட் பால். பாலாடையின் இன்பகரமான நற்சுவையை ஸல் பெற்றிருக்கிறது. வேறெந்த விலை குறைவான மோல்டட் பாலுக்கும் இந்த இன்சுவை கிடையாது! ஸல் உடன் கரைந்து விடுகிறது. ஸல்லை வெறும் நீரோடு கலந்தால் கூட மிகவும் சுவையுள்ள பானமாகிறது. அதை டீ, கோப்பி, இவற்றுடன் கலந்து பருகினால் அவற்றின் சுவை பன் மடங்காகிறது.

இன்றே உங்கள் வீட்டுக்கு ஒரு டின் ஸல் எடுத்துச் செல்லுங்கள்!

(* ஆனாலும், இதன் விலை சாதாரண மோல்டட் பால்களை விட அதிகமில்லை)

## ஸல் உடன் கரையும் மோல்டட் பால் குடும்பத்தார் உடன் விரும்புவது

*ஹார்லிக்ஸ் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்பட்டது*

## அதிக கட்டணம்

யாழ்ப்பாணம், புதன்

இ. போ. ச. தொழிலாளர் வேலைநிறுத்தம் காரணமாக சேவையாற்றும் தனிப்பட்ட மோட்டார் வாகனங்கள் கூடுதலான கட்டணங்களை அறவிடுவதாக பொதுமக்கள் புகார் செய்கின்றனர். இ. போ. ச. வேலை நிறுத்தத்தினால் இதுவரை எதுவித அசம்பாவிதங்களும் இங்கு நிகழவில்லை.


'விடி வெள்ளி' புகழ்

**பாலாஜியின்**

சில நடிப்பைக் காணத் தவறுதீர்கள்!

16-12-61

சனிக்கிழமை

பிரபல சினிமா நடிகர்

**பாலாஜி**

அவர்கள் திரும்பவும் யாழ்ப்பாணம் முத்தவெளி மைதானத்தில் நடைபெறும் களியாட்டு விழாவில் தோன்றி ரசிகர்களை தனது நடிப்பால் மகிழ்விப்பார்.

அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.


# வயோதிபரைத் தூக்கி எறிந்து கொன்றது யானை

## ஏமாற்றியதால் கோபம்

கொழும்பு, புதன்

யானையொன்றுடன் வேடிக்கை விளையாட்டுச் செய்த காரணத்தால் ஜி. பி. அட்டிகலை என்னும் 61 வயது நபர் மரணமானார். எட்டரை அடி உயரமுள்ள மெனிக்கே என்னும் 40 வயதுள்ள பழக்கப்பட்ட சாதுவான யானை தன்னுடன் கேலிவிளையாட்டு விளையாடிய அட்டிகலையை அது கொன்றுவிட்டது. தலங்கமா வடக்குப் பகுதியில் ஹினிட்டிக்கும்புரு வீதிகளில் மெனிக்கே என்னும் இந்த யானை உலாவி வருவது வழக்கம். மிகவும் சாதுவான யானையாகையால் சிறு பிள்ளைகள் கூட இதற்கு பணிஸ் போன்ற உணவுப் பண்டங்களை வழங்குவதுண்டு.

யானையை ஈ. பி. எல். லேவன்கமா என்னும் ஒரு மரக்காலை முகாமைக்காரர் வளர்த்துவந்தார். 26 வயதான எஸ். பி. ரன்ஹாமி என்பவர் யானையின் பாகனுக இருந்து வந்தார்.

ஜி. பி. அட்டிகலையின் மரணம்பற்றி மரண விசாரணை அதிகாரி திரு. ஜே. என். வி. திருச்செல்வத்தின் முன்னர் ரன்ஹாமிசாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"ஞாயிற்றுக்கிழமை மாலை யானையை ஹினிட்டிக்கும்புருக் குளத்துக்குக் குளிப்பாட்டக் கூட்டிச் சென்றேன். வழியில் யானையை ஒரு தோட்டத்தில் உலாவ விட்டுக் கடைப்புறஞ் சென்றேன். கடையில் நிற்கும் போது அட்டிகலை யானையிடம் சென்று அதைத் தடவியதைக் கண்டேன். பின்னர் ஒரு சீப்பு வாழைப்பழத்தைக் கொண்டு வந்து யானையிடம் நீட்டினார். யானை அதைப் பெற்றுக் கொள்ள முயன்றபோது அதை மறைத்து ஏமாற்றினர். இப்படியே சில தடவைகள் தொடர்ந்து செய்தபோது யானை அவரைத் தூக்கி எறிந்து கொன்றது."

## "கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடுகிறார்கள்"

யாழ்ப்பாணம், வியாழன்

"பல பகுதிகளிலுமுள்ள கிறிஸ்தவர்கள் எல்லோரும் இப்பொழுது ஒன்றாகக் கூடி வருகின்றார்கள். அவர்களின் வாழ்க்கை, மற்றவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமையும் என்று நான் எதிர்பார்க்கிறேன்."

இவ்வாறு யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் இங்கிலாந்து கல்வி பொதுக்காரியதரிசி டாக்டர் கதரீன் பிளிஸ் 'சமய சார்பற்ற மனிதன்' என்ற பொருள்பற்றிப் பேசுகையில் கூறினர்.

இக்கூட்டத்துக்கு தலைமை வகித்த வண. எஸ். கே. பங்கர், விரிவுரையாற்றிய டாக்டர் கதரீன் பிளிஸை ஆதரவாளர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

## பாலாஜியின் பதில்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெறும் காணிவலுக்கு சினிமா நடிகர் பாலாஜி சென்ற திங்கட்கிழமை மேயரின் தலைமையிலும், மறுநாள் திரு. கே. பி. சரவணமுத்துவின் தலைமையிலும் தோன்றி பல கேள்விக்குப் பதிலளித்தார். இதன் விவரங்கள் ஈழநாடு 'கலை அரங்கம்' பகுதியில் வெளியாகும். வருகிற சனிக்கிழமை 16ந் திகதி மீண்டும் அவர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து, மேற்படி காணிவலில் தோன்றுவார்.

## 'எதிரி கைகூப்பி வணங்கினர்'

இத்தலைப்பில் 'ஈழநாடு' 9-11-61 இதழில் ஒரு செய்தி வெளியாயிற்று. மல்லாகம் நீதிமன்றத்தில் நடைபெற்ற இவ் வழக்கில் சம்பந்தப்பட்டோர் எவரினதும் உள்ளத்தைப் புண்படுத்தும் நோக்கத்துடன் இச் செய்தி வெளியிடப்படவில்லை யென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஆசிரியருக்குக் கடிதம்

## பழுதடைந்துள்ள தெரு

காரைநகர் சிவன்கோவிலுக்குப் போகும் புதிய தெரு பழுதடைந்த நிலையில் இருக்கின்றது. இக்கோவிலுக்கு அருகில் சிவாச்சிரமமும் மாணிக்கவாசகர் மடாலயமும் இருக்கின்றன. இந்த இடங்களுக்குச் செல்லும் தெரு பள்ளங்களும் குழிகளுமாக இன்று காட்சியளிக்கின்றது.

கார், மோட்டார் வான், லொறி முதலிய வாகனங்கள் செல்லும் இத்தெரு கவனிப்பாரற்றுக் கிடப்பதால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகின்றனர். கிராமசபை இதனைக் கவனித்து ஆவன செய்யுமென நம்புகின்றோம்.

க. பரமலிங்கம்

# கல்வி சம்பந்தமான முக்கிய சம்பவங்கள்

## தினக்குறிப்பு எழுதும்படி கோரப்படுவர்

கொழும்பு, புதன்

கல்வி சம்பந்தமான முக்கிய சம்பவங்கள் பற்றித் தினக் குறிப்புக்களை எழுதி வைத்திருக்கும்படி பிரதேச கல்விக் கந்தோர்களிலும் ஏனைய உப கந்தோர்களிலும் கடமையாற்றி வரும் அதிகாரிகள் கேட்கப்பட்டுள்ளார்கள். வித்தியாதிபதி பிறப்பித்துள்ள இந்த உத்தரவு பிரதேசக் கல்விக் கந்தோர்களுக்கும் பிற கல்விக் கந்தோர்களுக்கும் பொறுப்பாகவுள்ள உதவி வித்தியாதிபதிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி சம்பந்தமான விஷயங்கள்பற்றிய தினக் குறிப்புக்கள், இந்தத் தினக் குறிப்புப் புத்தகத்தில் எழுதப்படவேண்டும் என வித்தியாதிபதி கேட்டுள்ளார். இவ்விஷயங்கள்பற்றி வித்தியாபகுதி அதிகாரிகள் தமது அபிப்பிராயங்களையும் எழுதிவிடவேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளனர். ஒவ்வொருமாதத்துக்குமுரிய தினக் குறிப்புகளும் அடுத்த மாதத்தின் 10-ம் திகதிக்கிடையில் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டுமாம். அதன் பிரதியொன்று வித்தியாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டுமாம். எது விஷயம் சம்பந்தமாகவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியிருந்தால் தலைமைக் காரியாலயத்தினர் குறிக்கப்பட்ட பகுதிக்கு அவை பற்றி அதிகாரிகள் பிரஸ்தாபிக்கலாம் எனவும் தெரிகிறது.

# குத்துக்காயங்களுடன் இறந்துகிடந்தார்

## இரு சந்தேக நபர் கைது

வவுனியா, புதன்

வவுனியா கடைவீதியில் பகவதி ஹோட்டலுக்கு முன்பாக வரதராசச் செட்டியார் மார்பில் கத்திக்குத்துக் காயங்களுடன் இறந்துகிடக்கக் காணப்பட்டார். அத்துடன் பகவதி ஹோட்டல் கார்ச்சாரதியான பாக்கியநாதனும் கத்திகுத்துக்காயங்களுடன் காணப்பட்டு உடன் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது விஷயமாக வவுனியா மாஜிஸ்டிரேட் திரு. இராசரத்தினம் மரணவிசாரணை நடத்தினர். வவுனியாப் பகுதி வைத்திய அதிகாரி திரு. என். யோகநாதன் பிரேதபரிசோதனை நடத்தியுள்ளார். சந்தேகத்தின்பேரில் சேனுதிராசா, ஆர். வெங்கடாசலச் செட்டியார் ஆகியோரை வவுனியாப்பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

## குஸ்பாரி சபாநாயகரானர்

டமாஸ்காஸ் டிச. 13

ஐக்கிய அரபுக் குடியரசிலிருந்து சிரியா பிரிந்தபின் மாகாண அதிபராகப் பதவி வகித்த டாக்டர் குஸ்பாரி சிரியாவின் புதிய பார்லிமெண்டின் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 172 அங்கத்தவர்களைக் கொண்ட சிரியா பார்லிமெண்டின் கூட்டம் வியாழக்கிழமைவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அன்றுதான் சிரியா ஜனதிபதி தெரிவு செய்யப்படுவார்.

## எதிர்க்கட்சி எச்சரிக்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தீரும். என்னை உள்ளிட்டு சமசமாஜ கட்சித் தலைவர்களைக் கைது செய்யப்போவதாக இலங்கை எங்கும் வதந்தியாக இருக்கிறது. இதற்கு நான் தயார். ஆனல் இதனல் வரக்கூடிய பலாபலன்களை ஏற்க அரசாங்கம் தயாராக இருக்க வேண்டும். மறியல் வீடு எனக்குப் புதிதல்ல. எனக்கு அனுபவமுண்டு. அதனல் பயமெதுவுமில்லை.

இலங்கைதொழிற்சங்க சரித்திரத்தில் இ போ ச வேலை நிறுத்தம் நூற்றுக்குநூறு வெற்றியாகும். இதிலிருந்து இன்றைய இ போ ச நிர்வாகத்தின்மீது எவ்வளவு எதிர்ப்பு உணர்ச்சி இருக்கிறதென்பது தெரிகிறது.

இப்போதுள்ள இ. போ சபையைக் கலைத்து புதிய மெம்பர்களை நியமிக்க வேண்டும். அப்போதுதான் நிர்வாகம் சீரடையும்.

நிதிமந்திரி பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா கூறியதாவது:—

முன்னறிவிப்புக்கொடுத்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டே இராது. இப்போதைய நிலை, சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதாக இல்லை. இராணுவத்தை அழைத்துள்ளது தொழிலாளருக்குப் போட்டியாகவல்ல. அவசரகாலத்தில் அத்தியாவசிய சேவைகளை நிர்வகிப்பதற்குத்தான். பொதுமக்களுக்கு கஷ்டமேற்படுத்த நாங்கள் விரும்பவில்லை. சமசமாஜக்கட்சித்தலைவரை கைது செய்வதென்ற யோசனை மந்திரிசபைக்கு இல்லை. அதைப் பற்றிய வதந்தி ஆதாரமற்றது.

திரு. பிலிப் குணவர்த்தன பின்னர் பேசுகையில், அவசர காலத்தை நீக்க வேண்டும். தேசிய அபிவிருத்தி வரியை வாபஸ்பெற வேண்டும். இ. போ. ச. 41வது உத்தரவை வாபஸ் பெறவேண்டும். இல்லாவிட்டால் மிக மோசமான நிலை ஏற்பட்டு அதற்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்கவேண்டியிருக்கும். எதிர்ப்புப் போராட்டத்துக்கு பின் நிற்கப்போவதில்லை.

திரு. ராபார்ட் குணவர்த்தன:- நாளைக்காலை 6 மணிக்குள்ளாக இந்த உத்தரவை வாபஸ் பெருவிட்டால் பாரதூரமான நிகழ்ச்சிகள் ஏற்பட இருக்கின்றன. அவ்விதம் ஏற்படாது தடுப்பது உங்கள் கடமையாகும். நிலைமை மோசமடைந்து கஷ்டத்தை அதிகரிக்க வேண்டாம்.

டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் சிப்பந்திகள் செய்யும் சிறு குற்றங்களுக்கும் பாரதூரமான தண்டனை விதிக்கப்படுகிறது. பழைய முதலாளித்துவ நிர்வாகத்தைப் போலவே இப்போதுமிருக்கிறது. எங்களுடன் செய்துகொண்ட ஒப்பந்த வாக்குறுதியை அரசாங்கம் பறக்கவிட்டுவிட்டது. அரசியலிலும் தொழிற்சங்க விஷயங்களிலும் அரசாங்கத்தின் வாக்குறுதியை நம்புவதற்கில்லை.'

விவாதம் வோட்டுக்கு விடப்படாமலே சபை இரவு 8-30 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.


விரைவில் எதிர்பாருங்கள்!

ராஜமணி பிக்சர்ஸ்

**பாசமலர்**

3-வது வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி)

நாகேஸ்வரராவ், அஞ்சலிதேவி, பாலையா நடித்த




மனோஹரா (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30

ஜெமினி கணேசன் அஞ்சலிதேவி நடித்த

கணவனே கண்கண்ட தெய்வம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.